# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

## 4.1 பொதுநோக்கு

*தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான பொது விலைமட்டம் 2017இல் பொதுவான அதிகரித்துச்செல்லும் போக்கினைப் பின்பற்றியதுடன் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த மட்டங்களில் விளங்கியது. பொதுவிலைமட்டத்தின் அவதானிக்கப்பட்ட அசைவிற்கு முக்கிய காரணிகளாக பொருளாதாரத்தின் வழங்கல்பக்க அபிவிருத்திகளே காணப்பட்டன. 2016இன் பிற்பகுதியிலிருந்தும் பெரும்பாலும் 2017இன் முழுக் காலப்பகுதியிலும் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் நிலவிய கடுமையான வரட்சி அனைத்து நுகர்வோர் விலை அளவீடுகளிலும் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த பங்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்நாட்டில் உற்பத்தியாகும் முக்கிய உணவுப் பண்டங்களின் மீது மோசமான தாக்கத்தினைக் கொண்டிருந்ததுடன், இதன் காரணமாக அவற்றின் விலைகளின் மீது மேல் நோக்கிய அழுத்தம் தோற்றுவிக்கப்பட்டது. எனினும், குறிப்பிட்ட இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்களுக்குரிய இறக்குமதித் தீர்வைகளுக்குச் செய்யப்பட்ட கீழ் நோக்கிய திருத்தங்களின் காரணமாக இத்தாக்கம் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. குறிப்பிட்ட பொருட்களின் நிருவகிக்கப்பட்ட விலைகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டமையின் காரணமாக உணவல்லாப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் பொது விலைமட்டம் மேல் நோக்கி நகரப் பங்களித்தன. இதன்படி, இவ்வாண்டுப்பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் பொதுவாக அதிகரித்துச் செல்லும் போக்குடன் நகர்ந்தது. மேலும், நுகர்வோர் விலைகளின் எதிர்கால நகர்வுகளைச் சமிக்ஞைப்படுத்தும் ஒட்டுமொத்த உற்பத்தியாளர் விலைகளும் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காட்டியதுடன் இவை வேளாண்மை மற்றும் தயாரிப்புப் பொருட்கள் இரண்டினதும் உற்பத்தியாளர் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் தூண்டப்பட்டன. உண்மைக் கூலிகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளின் நியதிகளின்படி, குறிப்பிட்ட துறைகளில் காணப்பட்ட தொழிலாளர் நிரம்பலின் பற்றாக்குறை, முறைசாரா தனியார் துறையில் மாத்திரம் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டமைக்கு, ஓரளவிற்கு ஆதரவாக அமைந்த வேளையில் 2017ஆம் ஆண்டுப்பகுதியில், முறைசார் தனியார் துறையில் உண்மைக் கூலிகளில் தேய்வொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்தமையானது பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தமையினைப் பிரதிபலிப்பதாகக் காணப்பட்டது. எனினும், பல துறைககளிடையே தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மையின் காரணமாக தோற்றம் பெற்றுவரும் தொழிலாளர் பற்றாக்குறை கரிசனைக்குரியதொன்றாகக் காணப்பட்ட போதிலும் இளைஞர்கள், பெண்கள் மற்றும் உயர்ந்த கல்வித் தகைமையுடையோரிடையே தொழிலின்மை வீதம் உயர்ந்த மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது. உள்நாட்டுச் சந்தையில் காணப்படுகின்ற தொழிலாளர் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்தும் விதத்தில், தொழில் பயிற்சி அதிகாரசபைகள் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளங்களை, குறிப்பாக நாட்டின் கிராமியத் துறையில் காணப்படும் அத்தகைய வளங்களைக் கவர்வதற்கு தொழிலாளர் சட்ட திருத்தங்களை அறிமுகப்படுத்துவதும் நடைமுறைப்படுத்துவதும் அவசியமானதாகக் காணப்படுகிறது.*

## 4.2. விலைகள்

### பொது விலைமட்டத்தின் அசைவுகள்

**நுகர்வோர் விலைச்சுட்டெண்கள், அடிப்படை காலப்பகுதி தொடர்பில் சராசரி வீட்டலகு ஒன்றினால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளைக் கொண்ட கூடையொன்றின் பொதுவிலைமட்டத்தினை அளவிடுகின்றது.** அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்களைத் தொகுப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகார நிறுவனமான தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் அத்தகைய இரண்டு சுட்டெண்களான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013=100) என்பனவற்றைத் தொகுக்கிறது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அசைவுகள் தேசிய மட்டத்திலான நுகர்வோரின் தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப்பொருட்களின் விலைப் போக்குகளையும் நுகர்வு மற்றும் செலவினத்தின் தன்மைகளையும் பிரதிபலிக்கின்ற வேளையில், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கொழும்பு மாவட்டத்தின் நகர்ப்பிரதேசங்களிலுள்ள நுகர்வோரின் அதே விடயங்களைப் பிரதிபலிக்கிறது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் பார்க்க ஒப்பீட்டு ரீதியில் உணவுப்பொருட்கள் மீதான செலவினத்தில் பெரும் பங்கைக் கொண்டிருக்கின்றது, இது முழுநாட்டினையும் பிரதிபலிக்கின்ற சராசரி வீட்டலகு ஒப்பீட்டு ரீதியில் உணவு வகையிலுள்ள பண்டங்கள் மீதான செலவினத்தின் பெரும்பங்கினை எடுத்துக்காட்டுகிறது. இச்சுட்டெண்களினால் அளவிடப்பட்டவாறான பொது விலைமட்டம் 2017இல் கலப்பான அசைவுகளுடன் பொதுவாக அதிகரித்த போக்குடன் நகர்ந்தமைக்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும்.

**முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டதைப் போன்றே, உணவு வகையின் விலைகளினது அசைவுகள் தளம்பலடையும் விலைகளைக் கொண்ட உணவின்[1] விலைகளுடன் பெருமளவிற்கு இசைந்து செல்வனவாகக் காணப்பட்டன.** தளம்பலடையும் விலைகளைக் கொண்ட உணவுகளின், குறிப்பாக அரிசி மற்றும் தேங்காயின் விலைகள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு நீண்ட பாதகமான வானிலை நிலைமைகளினால் தூண்டப்பட்ட வழங்கல்பக்கத் தடைகளே காரணமாகும். நுகர்வோர் விலைகளின் மீது வழங்கல் பக்க தடைகளின் எதிர்க்கணியத் தாக்கத்தினைக் குறைக்கும் பொருட்டு அரிசி இறக்குமதியினை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்தது. இதன் விளைவாக, இறக்குமதி செய்யப்படும் அரிசியின் மீது நிலவிய வரி அமைப்பு நீக்கப்பட்டதுடன் 2017 சனவரி 07ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கி.கிறாமொன்றிற்கு ரூ.15 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை மாத்திரம் விதிக்கப்பட்டது. உயர்வடைந்து சென்ற சில்லறை விலைகளின் காரணமாக

1 தளம்பல்படையும் விலைகளைக் கொண்ட உணவு அரிசி, இறைச்சி, உடன்மீன் மற்றும் கடலுணவு, தேங்காய், உடன்பழங்கள், மரக்கறி, கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கறிச்சரக்கை உள்ளடக்குகிறது.

அட்டவணை 4.1
உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்

| விடயம் | அலகு | ஆண்டுச் சராசரி | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | விலை - ரூபா | | | சதவீத மாற்றம் | |
| | | 2015 | 2016 | 2017 | 2016/ 2015 | 2017/ 2016 |
| உள்நாட்டு அரிசி - சம்பா | 1 கி.கி | 91.20 | 92.75 | 98.79 | 1.7 | 6.5 |
| அரிசி - பச்சை (சிவப்பு) | 1 கி.கி | 76.57 | 69.52 | 87.94 | -9.2 | 26.5 |
| அரிசி - பச்சை (வெள்ளை) | 1 கி.கி | 69.30 | 72.12 | 83.64 | 4.1 | 16.0 |
| அரிசி - நாடு | 1 கி.கி | 77.95 | 78.71 | 94.37 | 1.0 | 19.9 |
| உயர்நிலக் காய்கறிகள் - வரை | 1 கி.கி | 209.53 | 204.75 | 192.36 | -2.3 | -6.1 |
| கரட் | 1 கி.கி | 199.88 | 188.86 | 193.98 | -5.5 | 2.7 |
| கோவா | 1 கி.கி | 143.67 | 154.71 | 155.38 | 7.7 | 0.4 |
| பீட்ரூட் | 1 கி.கி | 160.12 | 165.81 | 163.14 | 3.6 | -1.6 |
| தாழ்நிலக் காய்கறிகள் - கத்தரி | 1 கி.கி | 123.87 | 133.08 | 161.72 | 7.4 | 21.5 |
| வெண்டி | 1 கி.கி | 138.80 | 139.29 | 148.89 | 0.4 | 6.9 |
| சுரக்காய் | 1 கி.கி | 149.56 | 155.58 | 192.23 | 4.0 | 23.6 |
| பாகற்காய் | 1 கி.கி | 185.35 | 200.51 | 236.98 | 8.2 | 18.2 |
| தேங்காய் (நடுத்தரம்) | காய் | 50.49 | 46.12 | 67.67 | -8.6 | 46.7 |
| மீன் - கெலவல்ல | 1 கி.கி | 799.29 | 860.68 | 950.17 | 7.7 | 10.4 |
| முட்டைகள் | ஒவ்வொன்றும் | 14.80 | 16.10 | 14.08 | 8.7 | -12.5 |
| இறக்குமதிகள் சீனி | 1 கி.கி | 87.80 | 100.69 | 107.48 | 14.7 | 6.7 |
| சிவப்பு பருப்பு | 1 கி.கி | 184.07 | 191.16 | 180.52 | 3.9 | -5.6 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

சிறப்புப் பண்டத் தீர்வை பல தடவைகள் கீழ் நோக்கித் திருத்தப்பட்டதுடன் பல அரிசி வகைகளின் மீது உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டதுடன் சிறப்புப் பண்டத் தீர்வை 2017 யூலை 27ஆம் நாளிலிருந்து கி.கிறாமிற்கு 25 சதத்தில் பேணப்பட்டது. 2017இன் பின்னரைப் பகுதியில் தேங்காய் விலைகள் மிகக்கூடியளவிற்கு அதிகரித்தமைக்கு நீண்ட வரட்சி நிலைமைகளின் காலம் கடந்த தாக்கத்தின் காரணமாக குறைவடைந்த உற்பத்தியே முக்கிய காரணமாகும். அதிகரித்துச் செல்லும் தேங்காயின் விலையினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2017 திசெம்பர் 6ஆம் திகதியிலிருந்து தேங்காயொன்றின் உயர்ந்தபட்ச சில்லறை விலை ரூ.75 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2017இன் பின்னரைப்பகுதியில் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டத்தில் காணப்பட்ட தேங்காயின் விலை ஆண்டின் இறுதிப்பகுதியில் மிதமடைந்தது. மேலும், தேங்காய் கொப்பறைகளின் இறக்குமதி மீது நிலவிய வரி அமைப்பு அகற்றப்பட்டதுடன் 2017 திசெம்பர் 14ஆம் நாளிலிருந்து தேங்காய் கொப்பறை மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.1 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது. 2017 மே காலப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளினால் மீன்பிடி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டமையின் காரணமாக வரையறுக்கப்பட்ட நிரம்பல் நிலைமைகளினால் உடன் மீனின் விலைகள் ஆண்டின் நடுப்பகுதி வரை அதிகரித்த போக்கினைக் காட்டி அதன் பின்னர் வீழ்ச்சியடைந்தன. காய்கறிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி விலைகளும் வழமையான பருவகால மாதிரிகளைத் தொடர்ந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் அதிகரித்தன. உருளைக்கிழங்கின் விலைகள் கலப்பான அசைவுகளுடன் பொதுவான வீழ்ச்சிப் போக்கினைக்காட்டியவிடத்து பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயத்தின் விலைகள் 2017இல் பொதுவாக அதிகரித்தன.

**உணவு வகையிலுள்ள தளம்பலடையும் விலைகளைக் கொண்ட உணவுகள் தவிர்ந்த ஏனைய உணவு வகையின் விலைகள் 2017இல் மிதமானதொரு வேகத்தில் அதிகரித்தன.** இறக்குமதி செய்யப்பட்ட முக்கியமான உணவுப் பொருட்களின் உள்நாட்டு விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டின. உள்நாட்டில் சீனியின் விலை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் அதிகரிப்பினைக் காட்டியமைக்கு உள்நாட்டுச் சீனி உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, ஆண்டுப்பகுதியில் பல தடவைகள் இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை மேல் நோக்கித் திருத்தப்பட்டமையே காரணமாகும். அதேவேளை, ஆண்டின் தொடக்கத்தில் உயர் மட்டத்தில் காணப்பட்ட பருப்பின் விலை படிப்படியாக வீழ்ச்சியடைந்து, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளைப் பதிவுசெய்தது. உள்நாட்டுச் சந்தையில் விலை அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, 2017 சனவரியில் சீனி, நெத்தலிக் கருவாடு, பருப்பு மற்றும் உருளைக்கிழங்கு உள்ளிட்ட சில உணவுப்பொருட்களின் மீது உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டன.

**உணவல்லாத மற்றும் ஏனைய வகைகளிலுள்ள விடயங்களின் விலைகள் பொதுவாக அதிகரிக்கும் போக்கினைக்காட்டி, பொது விலை மட்டத்தின் மீது சில மேல் நோக்கிய அழுத்தங்களைத் தோற்றுவித்தன.** தெரிந்தெடுக்கப்பட்ட உணவல்லா விடயங்களுக்குச் செய்யப்பட்ட நிருவாக விலைத் திருத்தங்கள் இவ்வுணவல்லா வகையின் விடயங்களின் விலைகளின் அதிகரிப்பிற்குப் பங்களித்தன. திரவப் பெற்றோலிய வாயுவின் விலை மற்றும் பேருந்துக் கட்டணங்களில் மேல் நோக்கிய திருத்தங்கள் செய்யப்பட்ட வேளையில் மண்ணெண்ணெயின் விலையில் கீழ் நோக்கிய திருத்தம் செய்யப்பட்டது. 2017 ஒத்தோபர் காலப்பகுதியில் உணவகங்கள் மற்றும் சுற்றுலாவிடுதி துணை வகையிலுள்ள தயாரிக்கப்பட்ட உணவுகள் சிலவற்றின் விலைகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டமைக்கு 2017 செத்தெம்பரில் திரவ பெற்றோலிய வாயுவின் விலைகள் அதிகரித்தமை காரணமாக இருக்கலாம். லொத்தர் பரிசுச்சீட்டு ரூ.20 இலிருந்து ரூ.30 இற்கு அதிகரிக்கப்பட்டமையும் பின்னர் அது பழைய விலைக்குக் கொண்டு வரப்பட்டமையும் 2017இல் அவதானிக்கப்பட்ட விடயமாகும். இணையப் பணிகள் மீதான தொலைத்தொடர்பூட்டல் தீர்வை அகற்றப்பட்டமையின் காரணமாக இணையக் கட்டணத்தில் சிறிய வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. 2018 வரவு செலவுத்திட்டத்தின்படி, குடிவகை மீது அளவினை அடிப்படையாகக் கொண்ட கலால் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2017 நவெம்பர் மற்றும் திசெம்பர் காலப்பகுதியில் சாராயத்தின் விலையில் அதிகரிப்பும் பியரின் விலையில் வீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டன. டெங்கு காய்ச்சலைக் கண்டறிவதற்காக தனியார் வைத்தியசாலைகளில் செய்யப்படும் இரத்தப் பரிசோதனைக்கான கட்டணத்தினைக்

அட்டவணை 4.2
நிருவகிக்கப்பட்ட விலைகளைக் கொண்ட முக்கிய பொருட்கள்

| விடயம் | அலகு | விலை (ஆண்டு இறுதி) - ரூ. | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2016 | 2017 | 2015/2014 | 2016/2015 | 2017/2016 |
| மண்ணெண்ணெய் | 1 லீற்றர் | 59.00 | 49.00 | 44.00 | -39.5 | -16.9 | -10.2 |
| எரிவாயு - லிட்றோ | 12.5 கி.கி | 1,346.00 | 1,321.00 | 1,431.00 | -29.0 | -1.9 | 8.3 |
| எரிவாயு - லாவ்ஸ் | 12.5 கி.கி | 1,346.00 | 1,321.00 | 1,431.00 | -29.0 | -1.9 | 8.3 |
| பேருந்து கட்டணம் | | | | | -8.2 | 6.0 | 6.3 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 4.3
விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

| சுட்டெண் | சுட்டெண் (ஆண்டு இறுதி) | | ஆண்டுக்காண்டு சதவீதமாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 (அ) | திசெ.2016/ திசெ2015 | திசெ.2017/ திசெ.2016 (அ) | 2016/2015 | 2017/2016 (அ) |
| தே.நு.வி.சு (2013=100) | 118.0 | 126.6 | 4.2 | 7.3 | 4.0 | 7.7 |
| கொ.நு.வி.சு (2013=100) | 114.7 | 122.9 | 4.5 | 7.1 | 4.0 | 6.6 |
| உ.வி.சி (2013 4ம் காலாண்டு=100) | 115.3 (ஆ) | 131.9 | 7.5 (ஆ) | 14.3 | 1.7 (ஆ) | 17.0 |
| மொ.உ.உ சுருக்கி (2010=100) | 131.8 (ஆ) | 142.7 | - | - | 4.1 (ஆ) | 8.2 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

குறைப்பதற்கு அரசாங்கம் தலையிட்டமையின் விளைவாக 2017 யூன் மற்றும் யூலை காலப்பகுதியில் மருத்துவக் கட்டணங்களின் விலைகளில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. டெங்கு பரவும் தன்மை குறைவடைந்ததும் விலைகளில் அவதானிக்கப்பட்ட இப்போக்கு மாற்றமடைந்தது.

## நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

### தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2017 சனவரியில் 119.3 சுட்டெண் புள்ளியிலிருந்து 2017 திசெம்பரில் 126.6 சுட்டெண் புள்ளிக்கு உயர்வடைந்தது.** மாதத்திற்கு மாத அடிப்படையில், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2017இன் முதலிரண்டு மாதங்களிலும் அதிகரித்து மாச்சில் சிறிதளவு வீழ்ச்சியடைந்து அதன் பின்னர் 2017 யூன் வரை அதிகரித்துக் காணப்பட்டது. எனினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2017 யூலையிலும் ஓகத்திலும் வீழ்ச்சியைப் பதிவுசெய்து அதன் பின்னர் அதன் போக்கினை மாற்றி 2017 இறுதி வரை அதிகரித்த போக்கில் அசைந்தது. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரிப்பிற்கு உணவு வகையின் விலைகள் முக்கிய காரணமாக அமைந்த வேளையில் குறிப்பிட்ட சில காலப்பகுதிகளில் மாத்திரம் உணவல்லா விடயங்களும் காரணமாக அமைந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.


### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2017 சனவரியில் 116.1 சுட்டெண் புள்ளியிலிருந்து 2017 திசெம்பரில் 122.9 சுட்டெண் புள்ளிக்கு மேல் நோக்கி நகர்ந்தது.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் காணப்பட்ட அசைவு தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுடன் இசைந்து செல்வதாக காணப்பட்டதெனினும் அதன் அளவுகள் வேறுபட்டனவாக இருந்தன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் நியதிகளில் உணவல்லா வகையின் தூண்டுதலினால் அதிகரித்த 2017 சனவரி மற்றும் நவெம்பர் மாத காலப்பகுதி தவிர்ந்த 2017 ஆண்டுப்பகுதி முழுவதிலும் சுட்டெண்ணின் அசைவிற்கு உணவு வகைகள் தூண்டுதலாக அமைந்தன. 2017 காலப்பகுதியில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் நியதிகளில் சிறிதளவு பங்களிப்பிற்கு காரணமாயமைந்த உணவல்லா வகை கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நியதிகளில் குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தமையினை அவதானிக்க முடிந்தது. இதற்கு தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் பார்க்க கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் உணவல்லா வகை ஒப்பீட்டளவில் உயர்ந்த நிறையினைக் கொண்டிருந்தமை காரணமாக இருக்கலாம்.

## முதன்மைப் பணவீக்கம்

**தேசிய நுகர்வொர் விலைச் சுட்டெண்ணில் ஏற்படும் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கம் 2017இல் கலப்பான நகர்வுகளுடன் பொதுவாக அதிகரித்துச் செல்லும் போக்கொன்றினை எடுத்துக்காட்டியது.** தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2017இன் முதற்காலாண்டுப் பகுதியில் சனவரியின் 6.5 சதவீதத்திலிருந்து மாச்சில் 8.6 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் 2017இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. எனினும், இது மூன்றாம் காலாண்டில் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கி

வரைபடம் 4.1
பணவீக்கத்தின் அசைவுகள்
(தே.நு.வி.சு மற்றும் கொ.நு.வி.சு)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

2017 ஒத்தோபரில் 8.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. அதன் பின் 2017 திசெம்பரில் 7.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டிற்கு ஆண்டு பணவீக்க அசைவு முக்கியமாக 2016ஆம் ஆண்டுப்பகுதியில் உணவு விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் 2016இல் அரசாங்கத்தின் வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டமை, இடைநிறுத்தப்பட்டமை மீண்டும் விதிக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக ஏற்பட்ட தளத் தாக்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது. மேலும், 2017 சனவரி, பெப்புருவரி, செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் காலப்பகுதியில் நிலவிய உயர்ந்த உணவு விலைகளிலிருந்து தோன்றிய மாதாந்த அதிகரிப்புக்கள் இம்மாதங்களில் ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கம் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. அதேவேளை, ஆண்டுச் சராசரி தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கம் 2017 சனவரியின் 4.6 சதவீதத்திலிருந்து 2017 திசெம்பரில் 7.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.


**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கத்தினையொத்த போக்கினையே பின்பற்றிக் காணப்பட்டது.** எனவே, 2017 சனவரியில் 5.5 சதவீதத்தில் காணப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கம் 2017 ஒத்தோபரில் 7.8 சதவீதத்திற்கு அதிகரித்து 2017 திசெம்பரில் 7.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டிற்கு ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கத்தின் அசைவிற்கு தளத்தாக்கமும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் காணப்பட்ட பொருட்களின் விலைகளில் காணப்பட்ட மாதாந்த அசைவுகளும் தூண்டுதலாக அமைந்தன. ஆண்டுச் சராசரி

அட்டவணை 4.4
உபதுறைகளின்படி ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்திற்கான பங்களிப்பு - திசெம்பர் 2017

| சுட்டெண் | கொ.நு.வி.சு. (2013=100) சதவீதம் | | தே.நு.வி.சு. (2013=100) சதவீதம் | |
|---|---|---|---|---|
| | மாற்றம் | பங்களிப்பு | மாற்றம் | பங்களிப்பு |
| எல்லாப் பொருட்களும் | 7.1 | 100.0 | 7.3 | 100.0 |
| உணவு மற்றும் வெறியமற்ற குடிபானங்கள் | 14.4 | 59.2 | 12.8 | 77.6 |
| உணவற்றவை, வெறியமுள்ள குடிபானங்கள் மற்றும் புகையிலை | 4.2 | 40.8 | 2.9 | 22.4 |
| வெறியமுள்ள குடிபானங்கள் மற்றும் புகையிலை | 1.5 | 0.3 | -0.9 | -0.4 |
| உடைகள் மற்றும் காலணி | 6.0 | 2.0 | 2.9 | 1.3 |
| குடியிருப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள் | 0.3 | 1.4 | 0.7 | 1.7 |
| தளபாடம், வீட்டுப்பாவனை பொருள் மற்றும் வழமையான வீட்டுப் பராமரிப்பு | 13.7 | 4.6 | 5.1 | 2.2 |
| நலன் | 6.5 | 5.1 | 3.4 | 2.3 |
| போக்குவரத்து | 4.0 | 4.9 | 5.2 | 6.0 |
| தொடர்பூட்டல் | -0.7 | -0.3 | -0.2 | -0.1 |
| பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம் | 2.6 | 0.4 | 2.6 | 0.5 |
| கல்வி | 11.0 | 9.3 | 4.4 | 1.7 |
| உணவுச்சாலைகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் | 9.1 | 6.5 | 2.3 | 1.2 |
| ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் | 13.2 | 6.5 | 9.6 | 6.0 |

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.2
மையப் பணவீக்கத்தின் அசைவுகள்
(ஆண்டுக்காண்டு சதவீத மாற்றம்)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பணவீக்கம் 2017 சனவரியில் 4.3 சதவீதத்திலிருந்து 2017 திசெம்பரில் 6.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.


## மையப் பணவீக்கம்

**ஆண்டிற்கு ஆண்டு தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் இவ்வாண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருந்தது.** இவ்வாண்டுப்பகுதியில் உணவல்லா விலைகளில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்புக்கள், 2016 ஆண்டுப்பகுதியில் அரச வரிகளுக்குச் செய்யப்பட்ட மாற்றங்களின் காரணமாக ஏற்பட்ட தளத்தாக்கத்துடன் சேர்ந்து 2017இல் ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கத்தின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்குப் பங்களித்தது. இதன்படி, 2017 சனவரியில் 7.1 சதவீதமாகவிருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் 2017 திசெம்பரில் 2.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, இதே போக்கினைப் பின்பற்றிக் காணப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் 2017 சனவரியில் 7.0 சதவீதமாக விளங்கி 2017 மாச்சில் 7.3 சதவீதத்திற்கு அதிகரித்து 2017 திசெம்பரில் 4.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம்

**பொருட்கள் மற்றும் பணிகளின் உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் பெறப்படும் விலைகளில் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்படும் சராசரி மாற்றங்களை அளவிடுகின்ற, தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணும் (2013 காலாண்டு 4 = 100) 2017இல் பொதுவாக அதிகரித்துச் செல்லும்**

வரைபடம் 4.3
உற்பத்தியாளர் பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டுக்காண்டு சதவீத மாற்றம்)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

**போக்கினைப் பின்பற்றியது.** உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் வேளாண்மை, தயாரிப்பு மற்றும் பொது வசதிகள் (மின்வலு மற்றும் நீர்வழங்கல்) துறைகளை உள்ளடக்கியிருக்கிறது. வேளாண்மை மற்றும் தயாரிப்புத் துறைகள் இரண்டிலுமுள்ள உற்பத்தியாளர் விலைகள் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. மின்வலு மற்றும் நீர்வழங்கல் துறையின் உற்பத்தியாளர் விலைகள் முதலாவது மற்றும் நான்காவது காலாண்டுப் பகுதிகளில் உறுதியாக விளங்கிய வேளையில் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதிகளில் தளம்பல் நிலையினைக் காட்டின. இவ்வாண்டுப்பகுதியில் உணவுப் பொருட்களின் நுகர்வோர் விலைகளில் பிரதிபலிக்கபபட்டவாறு வேளாண்மைத் துறையில் உற்பத்தியாளர் விலைகளில் கூடியளவு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டமைக்கு நீண்ட மோசமான வானிலை நிலைமைகளே காரணமாகும்.

**உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம் 2017இல் ஒப்பீட்டு ரீதியில் உறுதியான அசைவொன்றினை எடுத்துக்காட்டியது.** வேளாண்மைத் துணைத் துறையில் உற்பத்தியாளார் விலைப் பணவீக்கம் இவ்வாண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. மின்வலு மற்றும் நீர்வழங்கலில் உற்பத்தியார் விலைப் பணவீக்கம் இவ்வாண்டுப்பகுதியில் -1.8 சதவீதத்திற்கும் 2.8 சதவீதத்திற்குமிடையிலான வீச்சில் வேறுபட்டது. அதேவேளை, தயாரிப்புத் துணைத் துறையில் உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம் 2017இல் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருந்தது. ஒட்டுமொத்த உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம் வேளாண்மைத் துணைத் துறையில் காணப்பட்ட உற்பத்தியாளர் விலைப் பணவீக்கத்தின் அசைவினைப் பெருமளவிற்குப் பின்பற்றிக் காணப்பட்டது. இப்போக்கு இக்காலப்பகுதியில் நுகர்வோர் விலைப் பணவீக்கத்திலும் அவதானிக்கப்பட்டது. எனினும், உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்களில் உயர்ந்த நிறையினை உள்ளடக்கியுள்ள தயாரிப்பு துறையின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு ஒட்டுமொத்த உற்பத்தியாளர் விலைப் பணவீக்கத்தின் அதிகரிப்பினைத் தளர்த்துவதற்குப் பங்களித்திருக்கக்கூடும்.

## மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

**பொருளாதாரத்தின் அனைத்து மூன்று முக்கிய துறைகளிலும் காணப்பட்ட மேல் நோக்கிய விலை அசைவுகளின் காரணமாக, ஒட்டுமொத்த பொருளாதாரத்திலுமுள்ள உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள் மற்றும் பணிகளின் விலை அசைவுகளை அளவிடும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் அதிகரித்தது.** வேளாண்மை, கைத்தொழில், மற்றும் பணிகள் துறைகளின் விலைகள் 2016ஆம் ஆண்டின் முறையே 3.3 சதவீதம், 3.2 சதவீதம் மற்றும் 2.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 15.9 சதவீதத்திலும் 7.1 சதவீதத்திலும் 6.1 சதவீதத்திலும் அதிகரித்தன. இதன்படி, ஒட்டுமொத்த மொ.உ.உற்பத்திச் சுருக்கி 2016இன் 4.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 8.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## பணவீக்க எதிர்பார்க்கைகள்

**கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் உண்மைப் பணவீக்கத்துடன் நெருக்கமாக நன்கு சீரமைந்த அதேவேளை அண்மைக்கால மற்றும் நீண்டகால எதிர்பார்ப்புக்களுக்கிடையிலான இடைவெளி குறுக்கமடைந்தது.** காலப்போக்கில், பணவீக்க எதிர்பார்ப்புக்கள் காலம் கடந்த விதத்தில் நாணய மற்றும் இறைக் கொள்கை வழிமுறைகளுக்கு நெருக்கமாகப் பதிலிறுத்தின. மேலும், கம்பனித் துறையின் எதிர்பார்ப்புக்களினது அசைவுகள் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டினாலும் பிரதிபலிக்கப்பட்ட உண்மையான

அட்டவணை 4.5
துறைரீதியான சுருக்கிகளும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும்

(2010=100)

| துறை | சுட்டெண் 2015 (அ) | சுட்டெண் 2016 (அ) | சுட்டெண் 2017 (ஆ) | சதவீத மாற்றம் 2016/2015 (அ) | சதவீத மாற்றம் 2017/2016 (ஆ) |
|---|---|---|---|---|---|
| வேளாண்மை | 133.8 | 138.2 | 160.2 | 3.3 | 15.9 |
| கைத்தொழில் | 131.2 | 135.4 | 145.0 | 3.2 | 7.1 |
| பணிகள் | 128.4 | 132.1 | 140.1 | 2.9 | 6.1 |
| **மொ.உ.உ** | **126.6** | **131.8** | **142.7** | **4.1** | **8.2** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது


*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்

4

## சிறப்புக்குறிப்பு 3
## பணவீக்க எதிர்பார்க்கைகளை அளத்தல்

எதிர்கால பணவீக்கம் குறித்த பொருளாதார முகவர்களது நம்பிக்கைகள் அல்லது அனுமானம் என பொதுவாக வரைவிலக்கணப்படுத்தப்படும், பணவீக்க எதிர்பார்க்கையானது, விலை உறுதிப்பாட்டை அடைவதை நோக்காகக் கொண்டு உலகிலுள்ள மத்திய வங்கிகள் நாணயக் கொள்கையை நிர்ணயிக்கும் போது மையக் கவனப் புள்ளியாக நீண்டகாலமாக இருந்து வருகின்றது. பெயரளவுப் பணவீக்க இலக்கிற்கான ஒரு நிறுவன ரீதியான அர்ப்பணிப்பானது விலை உறுதிப்பாட்டினை மேம்படுத்த உதவும் என்பதை கல்வியாளர்களும்கூட கருத்துரைக்கின்றார்கள் (Mishkin, 2011). மேலும் பணவீக்க எதிர்பார்க்கையானது பல்வேறு வலயங்களில் விலை மற்றும் கூலி நிர்ணயங்களில் செல்வாக்குச் செலுத்துவதனூடாக உண்மைப் பணவீக்கத்தின் முக்கியமான தீர்மானிப்பாளராக விளங்குகிறது. குறுகியகால பணவீக்க எதிர்பார்க்கையின் ஒரு நீடித்து நிலைத்திருக்கும் எழுச்சியானது, விலை உறுதிப்பாட்டினை பேணுவதற்குப் பொருத்தமான மட்டங்களில் நாணயக் கொள்கையினை நிர்ணயிப்பதில் கருதப்படவேண்டிய முக்கியமான காரணியாகவிருக்கும், பொருளாதாரத்தின் மத்திய கால பணவீக்க அழுத்தங்களினை சமிக்ஞை செய்கின்றது (Patra and Ray, 2010). நீண்ட காலப் பணவீக்க எதிர்பார்க்கையானது நிலையான பணவீக்கத்தினை பேணுவதில் மத்திய வங்கியினுடைய நம்பகத்தன்மை மீதான பொதுமக்களின் பார்வையை குறித்துக் காட்டுகிறது. அதன் காரணமாக, பணவீக்க எதிர்பார்க்கைகள் பணவீக்க இலக்கிற்கு அருகாமையில் நிலைநிறுத்தப்படும் சந்தர்ப்பங்களில், விலை உறுதிப்பாட்டினை அடைவதில் நாணயக் கொள்கையின் வினைத்திறனும் மத்திய வங்கிகள் மீதான மக்களின் நம்பகத்தன்மை உயர்வாகக் காணப்படுவதால் மத்திய வங்கிகள், குறிப்பாக பணவீக்கத்தை இலக்கிடுபவை பணவீக்க எதிர்பார்க்கைகள் மீது விசேட கவனத்தை செலுத்துகின்றது (Bernanake, 2007). அதற்கிணங்க, விலை உறுதிப்பாட்டினை பேணுதலில் குறிப்பாக நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடலை நோக்கிய நாணயக் கொள்கை கட்டமைப்பின் படிப்படியான பரிமாற்றத்தினுடன் பணவீக்க எதிர்பார்க்கைகளை அளத்தல் இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம் தொடர்பில் மிகமுக்கிய பகுதியாக மாறிவந்துள்ளது.

வரைபடம் சி.கு. 3.1
பணவீக்க எதிர்பார்க்கைகள் அளவீடுகள்




உண்மை நேரத்தில் அவதானிக்கப்பட முடியாத, பல்வேறு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அளவிடப்படும் பணவீக்க எதிர்பார்க்கைகள் பணவீக்க எதிர்வுகூறலுக்கும் நாணயக் கொள்கையின் எதிர்காலப் பாதையை நிர்ணயிப்பதற்கும் உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றது. அளவீட்டு அடிப்படை மற்றும் சந்தை உள்ளடக்க அளவீடுகளே பணவீக்க எதிர்பார்க்கைகளை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் இரு பொதுவான முறைகளாகும் (Adeney, Arsone and Evans, 2017)[1]. அளவீட்டு அடிப்படையான அளவீடானது குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தின் அடிப்படையில் பணவீக்கமானது எவ்வாறு இருக்குமென எதிர்பார்க்கின்றார்கள் என இலகுவாக கேள்வி கேட்பதன் மூலமாக மக்களினது பணவீக்கத்தின் எதிர்பார்ப்புக்களை அளவிடுகின்றது. பொதுவில், பணவீக்க எதிர்பார்க்கை அளவீடுகள் மூன்று வகையான பதிலிறுப்பாளர்களை கருத்திற்கொள்கிறது. அதாவது, வீட்டிலிருப்பவர்கள், வணிகர்கள் மற்றும் தொழில்புரிவோர். அளவீட்டின் கால அளவு மாதத்திலிருந்து அரையாண்டு வரை வேறுபடும். வருங்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க விளைவுகளிற்கு நெருக்கமான பிணைப்புடைய பெறுபேறுகளைக் கொண்ட குறிப்பிட்ட நிதிக் கருவிகளின் அவதானிக்கப்பட்ட விலைகளிலிருந்து சந்தை அடிப்படையிலான அளவீடுகள் பெறப்படுகின்றது. மிகப்பரவலாக பயன்படுத்தப்படும் சந்தை உள்ளடக்க அளவீடானது சுட்டெண் பிணைப்புடைய நிதியியல் பிணையங்களினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.


இலங்கையைப் பொறுத்தவரையில், பணவீக்க எதிர்பார்க்கையின் அளவீட்டு அடிப்படையான அளவீடுகளின் ஆரம்பமானது 2006 வரை பிந்தையதாகும். அதிலிருந்து மேம்பட்ட தரம் மற்றும் நேரந்தவறாமையுடன் கூடிய பரந்த பதிலிறுப்பாளர்களைப் பெறுவதற்காக இவ்வளவீடுகள் பல தடவைகள் மீள்கட்டமைக்கப்பட்டது. இவ்வளவீடானது கம்பனித்துறை, குடியிருப்பாளர் துறை மற்றும் கல்வியியலாளர்களை உள்ளடக்கிய மூன்று பதிலிறுப்பாளர் வகைகளுக்கு பரந்தளவில் வகைப்படுத்துகின்றது. கம்பனித்

1 நியுசிலாந்து, இந்தியா மற்றும் கனடா என்பன எதிர்பார்க்கை அளவீடுகளிற்காக அளவீட்டை அடிப்படையாகக் கொண்ட முறைமைகளை மாத்திரம் பயன்படுத்த அமெரிக்கா, ஐரோப்பியப் பகுதி, யப்பான், ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா மற்றும் சுவீடன் என்பன இரு வகைகளையும் பயன்படுத்துகின்றன.

4

துறைக்கான அளவீட்டில் பதிலிறுப்பாளர்கள் நடப்பு மாதம், எதிர்வரும் மூன்று, ஆறு மற்றும் பன்னிரண்டு மாதங்களிற்கு அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்தின் வீதத்தை வழங்குகின்றனர். இவ்வளவீடு மின்னஞ்சல் வழியாக நடாத்தப்படுகின்றது. கம்பனித் துறையின் மாதிரி கட்டமைப்பானது நிதியியல் துறை[2] பங்கேற்பாளர்கள், கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உறுப்புக் கம்பனிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. நிதியியல் அறிவு மற்றும் தகவல் கிடைப்பனவு என்பன கம்பனித் துறைகளை விட ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படும் குடியிருப்பாளர் துறையிற்காக, கொழும்பு மாவட்டத்தின் பொது நிறுவனங்களிலிருந்து எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களுடன்[3] கலந்துரையாடல்கள் மூலமாக அளவீடுகள் நடாத்தப்படுகின்றன. தகவல் கிடைப்பனவு தொடர்பான பிரதி கூலத்தினை ஈடுசெய்வதற்கு அளவீட்டிற்கு முன்பாக பணவீக்கம் தொடர்பாக ஒரு சுருக்கமான அறிமுகம் வழங்கப்படுவதுடன் எதிர்காலத்திற்கான அவர்களது எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்தின் வீச்சுக்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும், இலங்கை மத்திய வங்கி 2017இன் நடுப்பகுதியிலிருந்து கல்வியியலாளர்களிடமிருந்து பதிலிறுப்புக்களைப் பெற ஆரம்பித்தது. இப்பதிலிருப்புக்கள் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்களிடமிருந்து பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட வீதம் பெறப்படுகின்றது. அனைத்து மூன்று பதிலிறுப்பு வகையினரும் அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்திற்கான காரணத்தை குறிப்பிட அறிவுறுத்தப்படுவதுடன், சேகரிக்கப்பட்ட தரவுகள் பணவீக்க எதிர்பார்ப்புக்களின் நடுப் பெறுமானத்தைப் பயன்படுத்தி ஆய்வு செய்யப்படுகின்றன.

வரைபடம் சி.கு. 3.2
பணவீக்க எதிர்பார்க்கைகள் அளவீட்டு உள்ளடக்கம்





2 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள்.

3 ஒரு நிறுவனத்தின் பல்வேறுபட்ட கூலி மட்டங்களிலுள்ள ஊழியர்கள் பாரபட்சங்களை தவிர்க்கும் முகமாக நேர்காணல் செய்யப்படுவர்.

**இலங்கையின் பணவீக்க எதிர்பார்க்கைகளின் நடத்தை**

இலங்கையின் பணவீக்க எதிர்பார்க்கையானது, குறிப்பாக கம்பனித் துறைக்கானது, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டு சுட்டெண்களாலும் அளவிடப்பட்ட உண்மைப் பணவீக்கத்தின் போக்குகளுடன் நன்கு சீரமைந்ததாகக் காணப்படுகின்றது.

வரைபடம் சி.கு. 3.3
பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் உண்மைப் பணவீக்கம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

பல ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட வகையில், நாணய மற்றும் இறைக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பதிலிறுப்பாளர்களது எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க மட்டங்களில் பிரதிபலிக்கப்பட்டன. எவ்வாறாயினும், அவை காலம் கடந்தவையாயிருந்தன. உதாரணமாக, பதிலிறுப்பாளர்கள் நாணயக் கொள்கை நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மிகையான விலை அழுத்தத்தினைக் கட்டுப்படுத்துமென நம்பியதன் காரணமாக, முன்னைய காலங்களில் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு அவர்களது பணவீக்க எதிர்பார்க்கைகளைக் குறைத்தும் அல்லது அதிகரிக்காமலும் வெளிப்படுத்தினர். அதைப் போலவே, 2016 மேயில் அரசாங்க வரிக் கட்டமைப்பில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போது அவர்களது எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்தினை பதிலிறுப்பாளர்கள் அதிகரித்தது அளவீடுகளில் பிரதிபலிக்கப்பட்டன.

கம்பனித் துறையின் குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பணவீக்க எதிர்பார்க்கைகளிற்கு இடையிலான இடைவெளியானது குறுக்கமடைந்ததனூடாக எதிர்காலப் பணவீக்கத்தின் தளம்பல்

வரைபடம் சி.கு 3.4
கம்பனித்துறையின் பணவீக்க எதிர்பார்க்கைகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டமை குறித்துக் காட்டப்பட்டது. 2017 காலப்பகுதியில் கம்பனித் துறையினால் அவர்களது எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்திற்கான மேற்கோளிடப்பட்ட காரணங்களாக உள்நாட்டு வழங்கல்பக்க நிலைமைகள் மற்றும் உள்நாட்டு நாணயத்தின் பலம் தொடர்பான அவர்களது அனுமானம் விளங்கின. குடியிருப்பாளர் துறையினரின் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்தின் பரிமாணமானது பொதுவாக கம்பனித் துறையைவிட உயர்வாக காணப்பட்ட போதிலும், அவர்களது எதிர்பார்க்கைகளும் கொள்கை அளவீடுகளின் மாற்றங்களோடு ஒன்றிணைந்ததாக காணப்பட்டது. மேலும், கல்வியியலாளர்களிற்காக சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கை அளவீட்டு பெறுபேறுகளும் கம்பனித் துறையினை ஒத்த அமைப்பினையே காட்டுவதுடன் உண்மைப் பணவீக்கத்துடன் நெருக்கமாக இணங்கியதும் அவதானிக்கப்பட்டது.

**முன்னோக்கிய பயணம்**

நாட்டு அனுபவங்களானது பணவீக்க எதிர்பார்க்கை அளவீடை நடத்துவதில் தேசிய உள்ளடக்கத்தினைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்படும் தற்போதைய பணவீக்க எதிர்பார்க்கை அளவீட்டின் பிரதான வரையறையானது வரையறுக்கப்பட்ட புவியியல் உள்ளடக்கமாகும். அதன் காரணமாக, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தரவு சேகரிப்பு அமைப்பை நெருக்கமாக தொடரும் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின்[4] புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வலையமைப்பினூடாக கொழும்பு மாவட்டத்தையும் தாண்டி பணவீக்க எதிர்பார்க்கை அளவீட்டை விஸ்தரிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. நாடளாவிய ரீதியிலான தரவு சேகரிப்பு முறைமையானது மென்பொருள் செயலியுடன் கூடிய டெப்லட் கணினி முறைமையூடாக அதேநேரத் தரவு முகாமைத்துவத்தினைக் கொண்டுள்ளது. இவ்வாறாக, இம்முறைமையினூடாக பணவீக்க எதிர்பார்க்கை அளவீட்டினை நடத்துவதன் மூலம் குடியிருப்பாளர் துறையின் பணவீக்க எதிர்பார்க்கையின் துல்லியத்தையும் உள்ளடக்கத்தையும் மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

பல ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டவராக குடியிருப்பாளர் துறையின் தனிநபர்களின் உயர் பணவீக்க எதிர்பார்க்கைக்கு வரையறுக்கப்பட்ட பொருளியல் அறிவு மற்றும் குறைந்தளவான நிதியியல் அறிவு என்பன பங்களித்திருக்கலாம். இப்பிரச்சனையைத் தீர்க்கும் முகமாக, எதிர்வரும் மூன்று மாதம் அல்லது ஒரு ஆண்டிற்கான உணவு மற்றும் உணவல்லா வகைகள் உள்ளடங்கலாக நுகர்வோரின் செலவுகளின் வேறுபாடுகளினுடைய எதிர்பார்க்கப்பட்ட மட்டங்கள் மீது குடியிருப்பாளரது பண்புசார் பதிலிறுப்பை, நாடளாவிய ரீதியிலான தரவு சேகரிப்பு முறைமையைப் பயன்படுத்துவதனூடாக பணவீக்க அனுமான அளவீடு ஒன்றை அறிமுகப்படுத்தும் செயற்பாட்டில் இலங்கை மத்திய வங்கி உள்ளது. பணவீக்க அனுமான அளவீடானது குடியிருப்பாளர்களது உண்மையான பணவீக்கக் கருத்துக்களை மேலும் நுட்பமாகப் பெற வசதிப்படுத்தும் அதேவேளை, பணவீக்கம் குறித்து மேலதிக விழிப்புணர்வையும் வழங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்க அனுமானம் மற்றும் எதிர்பார்க்கை அளவீடுகளில் இந்தியாவின் அனுபவத்திற்கொப்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வுகளுடன் தொடர்ச்சியாக இத்தகைய அளவீடுகள் மேம்படுத்தப்படமுடியும் (Mohanty, 2012). நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடல் முறைமையின் கீழ் வினைத்திறனான நாணயக் கொள்கை மீது இன்றியமையாத விளைவுகளை கொண்டுள்ள, பொதுமக்களின் எதிர்பார்க்கை அமைப்பாக்கத்தின் செயன்முறையை மேம்படுத்தக்கூடியதாக நிதியியல் அறிவை மேம்படுத்துவதனூடாக முன்னேற்றகரமாக்கலாம்.

4 நாடளாவிய ரீதியிலான தரவு சேகரிப்பு முறைமையானது நுகர்வோர் பொருட்களின் சில்லறை விலைகள், விவசாய பண்டங்களின் உற்பத்தியாளா விலை மற்றும் நாளாந்த அடிப்படையில் முறைசாரா துறையானது நாளாந்த கூலி என்பவற்றை சேகரிக்கிறது.

**References**

Bernanke, B.S. (2007), "Inflation Expectations and Inflation Forecasting", at the Monetary Economics workshop of the NBER Summer Institute, Cambridge. https://www.federalreserve.gov/newsevents/speech/bernanke20070710a.htm, Accessed on 15 March 2018.

Adeney, R., Arsov, I. and Evans, R. (2017), "Inflation expectations in advanced economies." Reserve Bank of Australia Quarterly Bulletin, March 2017, pages 31-41.

Mishkin, F.S. (2011), "Monetary Policy Strategy: Lessons from the Crisis", NBER Working Paper No. W16755. Available at SSRN: https://ssrn.com/abstract=1754908, Accessed on 10 March 2018.

Mohanty, D. (2012), "The importance of inflation expectations", at the S P Jain Institute of Management & Research, Mumbai.

Patra, M.D, Ray, P (2010), "Inflation Expectations and Monetary Policy in India: An Empirical Exploration", IMF Working Paper No. WP/10/84


4

பணவீக்கத்துடன் நன்கு இணைந்து செல்வதாகக் காணப்பட்டன. பதிலிறுப்பாளர்களினால் அவர்களின் பணவீக்க எதிர்பார்ப்பு மட்டங்களுக்காக எடுத்துக்காட்டப்பட்ட காரணங்களாக வழங்கல்பக்க தடங்கல்கள் மற்றும் உள்நாட்டு நாணயத்தின் பலம் தொடர்பான அவர்களது அனுமானம் என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கியிருந்தன. மேலும், வீட்டலகுகள் துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்களும் பொதுவிலைமட்டங்களில் காணப்பட்ட அதிகரிப்புக்களுக்கேற்ப வேறுபட்ட போதும், அவை கம்பனித் துறையின் எதிர்பார்ப்புக்களிலும் பார்க்க இயல்பாகவே உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டன.

## 4.3 கூலிகள்

**2017ஆம் ஆண்டுப்பகுதியில், உண்மைக் கூலிகள் கீழ் நோக்கிய போக்கினைக் கொண்டிருந்தமையின் காரணமாக கூலிவீதச் சுட்டெண்கள் பொருளாதாரத்தில் கூலி அழுத்தங்களுக்கான சமிக்ஞைகளை எடுத்துக்காட்டின.** இதற்கு பெயரளவுக் கூலிகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பு பணவீக்கத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பிலும் பார்க்க மெதுவாக இருப்பதே காரணமாகும். இது 2017இல் அரச மற்றும் முறைசார்ந்த தனியார் துறைகளில் முனைப்பாகக் காணப்பட்டது. எனினும், பொது விலை மட்டத்தின் மீதான கூலிகளிலிருந்தான கேள்வி அழுத்தம் இவ்வாண்டுப்பகுதியில் குறைவடைந்தே காணப்பட்டது.

வரைபடம் 4.4
உண்மைக்கூலிகள் விலைச்சுட்டெண்கள்
(ஆண்டுச் சராசரி மாற்ற வீதம்)




*மூல*ங்கள்: இலங்கை மத்திய வங்கி
தொழில் திணைக்களம்

## பொதுத் துறைக் கூலிகள்

**2017இல் அடிப்படைச் சம்பளத்திற்கு சிறப்புப் படிகளும் இடைக்காலப் படிகளும் உள்ளடக்கப்பட்ட போதும் 2017இல் பொதுத் துறை ஊழியர்களின் மொத்தச் சம்பளம் மாற்றமின்றிக் காணப்பட்டது.** இதன்படி, பொதுத் துறை கூலிவீதச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான பொதுத் துறை ஊழியர்களின்

அட்டவணை 4.6
கூலிவீதச் சுட்டெண்கள்

| தொழில்நிலை வகை | சுட்டெண் | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு | | உண்மையான | | பெயரளவு | | உண்மையான | |
| | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 |
| 1. அரச ஊழியர்கள் | | | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் (2012=100) | **160.8** | **160.8** | **140.9(அ)** | **130.9(அ)** | **3.9** | **0.0** | **-0.1** | **-7.2** |
| முதல் நிலை அலுவலர்கள் | 170.4 | 170.4 | 149.4(அ) | 138.7(அ) | 4.6 | 0.0 | 0.6 | -7.2 |
| இரண்டாம் நிலை அலுவலர்கள் | 161.6 | 161.6 | 141.7(அ) | 131.5(அ) | 3.7 | 0.0 | -0.2 | -7.2 |
| மூன்றாம் நிலை அலுவலர்கள் | 155.5 | 155.5 | 136.3(அ) | 126.6(அ) | 4.4 | 0.0 | 0.4 | -7.2 |
| மூத்த நிலை அலுவலர்கள் | 141.4 | 141.4 | 123.9(அ) | 115.0(அ) | 5.0 | 0.0 | 1.0 | -7.2 |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | | | |
| அனைத்து கூலி நிர்ணயச் சபை (1978 திசெம்பர் =100) | **4,127.9** | **4,128.6** | **103.5(ஆ)** | **97.4(ஆ)** | **0.0** | **0.0** | **-3.6** | **-5.9** |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 4,735.7 | 4,736.7 | 118.8(ஆ) | 111.8(ஆ) | 0.0 | 0.0 | -3.5 | -5.9 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 3,459.1 | 3,459.1 | 86.8(ஆ) | 81.6(ஆ) | 0.0 | 0.0 | -3.6 | -5.9 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 2,313.2 | 2,313.2 | 58.0(ஆ) | 54.6(ஆ) | 0.0 | 0.0 | -3.6 | -5.9 |
| 3. முறைசாரா தனியார்துறை ஊழியர்கள் | | | | | | | | |
| அனைத்து முறைசாரா தனியார்துறை (2012=100) | **136.7** | **149.7** | **119.8(அ)** | **121.8(அ)** | **7.9** | **9.5** | **3.7** | **1.7** |
| வேளாண்மை | 136.9 | 150.9 | 119.9(அ) | 122.8(அ) | 6.7 | 10.3 | 2.6 | 2.3 |
| கைத்தொழில் | 140.7 | 155.0 | 123.3(அ) | 126.1(அ) | 9.1 | 10.2 | 4.9 | 2.3 |
| பணிகள் | 132.8 | 144.1 | 116.4(அ) | 117.2(அ) | 7.2 | 8.5 | 3.1 | 0.7 |

(அ) தேசிய நுகர்வோர் விலைசுட்டெண்ணை (2013=100 அடிப்படையாக கொண்டது
(ஆ) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை (2006/07=100) அடிப்படையாகக்கொண்டது

*மூலங்கள்:* தொழிலாளர் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

பெயரளவுக் கூலிகள் (2012 = 100) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் மாற்றமின்றிக் காணப்பட்டன. இதன்படி, 2016இல் காணப்பட்ட 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவு உண்மைக் கூலித் தேய்வுடன் ஒப்பிடுகையில் பணவீக்கத்தில் காணப்பட்ட அபிவிருத்திகளின் விளைவாக பொதுத் துறை ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2017இல் 7.2 சதவீத தேய்வினைக் கொண்டிருந்தன.

### தனியார் துறைக் கூலிகள்

**2017இல் முறைசார்ந்த தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் சிறிதளவால் அதிகரித்தன.** கூலி நிர்ணய சபையால்[2] (1978 = 100) நிருவகிக்கப்படும் ஊழியர்களின் குறைந்தபட்சக் கூலிகளில் ஏற்படும் ஆண்டுச் சராசரி மாற்றத்தின் நியதிகளில் அளவிடப்படுகின்ற இச்சுட்டெண்கள் தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றன. எனினும், முறைசார்ந்த தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 2016இன் 3.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் 5.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**சந்தை நிலைமைகளின் அடிப்படையில் கூலிகள் நிர்ணயிக்கப்படுகின்ற முறைசாரா தனியார் துறையில் பெயரளவு மற்றும் உண்மைக் கூலிகள் இரண்டிலும் 2017ஆம் ஆண்டில் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.** முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்ணில் (2012 = 100) ஏற்பட்ட ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டின் 7.9 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் 9.5 சதவீதத்தினால் அதிகரித்தது. அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறையின் பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண்கள் 2017இல் முறையே 10.3 சதவீதத்தினாலும் 10.2 சதவீதத்தினாலும் 8.5 சதவீதத்தினாலும் அதிகரித்தன. கட்டுமானத் துறையின் விரைந்த விரிவாக்கத்தின் காரணமாக இத்துறையில் தொழிலாளர்களுக்கான அதிகரித்த கேள்வியின் விளைவாக கொத்தனார் மற்றும் தச்சுத்தொழில் வர்த்தகங்களிலுள்ள பெயரளவு நியதிகளிலான கூலிகள் 2017இல் முறையே 12.5 சதவீதத்தினாலும் 11.2 சதவீதத்தினாலும் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. முறைசாரா தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலி வளர்ச்சி 2016இல் பதிவுசெய்யப்பட்ட 3.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 1.7 சதவீதமாகக் காணப்பட்டது.

2 பெயரளவுக் கூலிகள் சுட்டெண் தொகுக்கப்படும் போதும் இலங்கை மத்திய வங்கியினால் உண்மைச் சுட்டெண் தொகுக்கப்பட்ட போதும் 21 கூலிகள் நிர்ணய சபைகளின் குறைந்தபட்சக் கூலிகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**2017இல் நடுவாண்டுக் குடித்தொகை 1.1 சதவீத ஆண்டு வளர்ச்சியுடன் 21.4 மில்லியனில் மதிப்பிடப்பட்டதுடன் வளர்ச்சி வீதம் 2016இன் வீதத்துடன் மாற்றமின்றிக் காணப்பட்டது.** இது 10.4 மில்லியன் ஆண்களையும் (48.4 சதவீதம்) 11.1 மில்லியன் பெண்களையும் (51.6 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது. 2017இல் மொத்தக் குடித்தொகையில் வயது வகைகளின் தொடர்பான குடித்தொகை 15 வயதிற்குக் கீழ், 15 - 59 ஆண்டுகள்,மற்றும் 60 ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் என்பன முறையே 25.2 சதவீதம், 62.4 சதவீதம், 12.4 சதவீதம் கொண்ட பங்குகளைக் காட்டின. குடித்தொகை அடர்த்தி[3] அனைத்து மாவட்டங்களிலும் அவதானிக்கப்பட்டவாறு 2016இன் 338 இலிருந்து 2017இல் 342

3 நிலத்தின் சதுரகிலோமீற்றரொன்றில் வதியும் ஆட்களின் எண்ணிக்கை

அட்டவணை 4.7
மாவட்ட அடிப்படையில் குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ) (ஆ)

| மாவட்டம் | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|
| | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி (இ) | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி (இ) |
| கொழும்பு | 2,395 | 3,543 | 2,419 | 3,578 |
| கம்பஹா | 2,372 | 1,769 | 2,391 | 1,783 |
| களுத்துறை | 1,261 | 800 | 1,271 | 806 |
| கண்டி | 1,434 | 748 | 1,452 | 757 |
| மாத்தளை | 508 | 260 | 514 | 263 |
| நுவரெலியா | 748 | 438 | 756 | 443 |
| காலி | 1,102 | 682 | 1,113 | 688 |
| மாத்தறை | 845 | 665 | 851 | 670 |
| அம்பாந்தோட்டை | 637 | 255 | 647 | 259 |
| யாழ்ப்பாணம் | 602 | 648 | 608 | 654 |
| மன்னார் | 106 | 56 | 107 | 57 |
| வவுனியா | 182 | 98 | 184 | 99 |
| முல்லைத்தீவு | 95 | 39 | 96 | 40 |
| கிளிநொச்சி | 122 | 101 | 124 | 103 |
| மட்டக்களப்பு | 550 | 211 | 560 | 215 |
| அம்பாறை | 691 | 164 | 705 | 167 |
| திருகோணமலை | 404 | 160 | 412 | 163 |
| குருநாகல் | 1,676 | 362 | 1,694 | 366 |
| புத்தளம் | 801 | 278 | 814 | 282 |
| அநுராதபுரம் | 905 | 136 | 918 | 138 |
| பொலனறுவை | 425 | 138 | 431 | 140 |
| பதுளை | 854 | 302 | 864 | 306 |
| மொனராகல | 479 | 87 | 485 | 88 |
| இரத்தினபுரி | 1,140 | 352 | 1,151 | 356 |
| கேகாலை | 869 | 516 | 877 | 520 |
| **மொத்தம்** | **21,203** | **338** | **21,444** | **342** |

(அ) தற்காலிகமானது
(ஆ) 2012 ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும் வீடமைப்பு மதிப்பீடுகளின் இறுதி அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டது.
(இ) ஒரு சதுர கி.மீ.கான நபர்கள்

*மூலம்:* பதிவாளர் நாயகத் திணைக்களம்

4

இற்கு தொடர்ச்சியாக அதிகரித்தது. மொ.உ. உற்பத்திக்கு முதன்மைப் பங்களிப்பாளராக விளங்கும் மேல் மாகாணம் மொத்த நடுவாண்டுக் குடித்தொகையில் 28.4 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மத்திய, தென், மற்றும் வடமேல் மாகாணங்கள் முறையே 12.7 சதவீதத்தினையும் 12.2 சதவீதத்தினையும் 11.7 சதவீதத்தினையும் 2017இல் பங்களித்தன.

**தற்பொழுது இலங்கையின் குடித்தொகையில் முக்கியமான அம்சம் யாதெனில் 60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்ட வயது முதிர்ந்த குடித்தொகை 1981இல் காணப்பட்ட 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 12.4 சதவீதம்[4] கொண்ட அதிகரித்த பங்கைக் காட்டுவதாகும்.** இது குடித்தொகையின் சராசரி வயது 21 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகளுக்கு[5] அதிகரித்தமையின் மூலம் ஆதரவளிக்கப்பட்டதுடன் இதே காலப்பகுதியில் முதியோரின் தங்கியிருப்பு வீதம்[6] 12 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு அதிகரித்தது. அத்தகைய தோற்றப்பாட்டிற்குக் குறைந்தமட்ட குடித்தொகை வளர்ச்சியும் ஒப்பீட்டு ரீதியில் வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் உயர்வடைந்தமையே காரணமாகும். அத்தகைய குடித்தொகையியல் போக்குகள் குறைவடைந்த தொழிற்படைப் பங்கேற்பு, அதிகரித்த தங்கியிருக்கும் விகிதம், குறைந்த உற்பத்தித்திறன், குறைந்த சேமிப்பு விகிதங்கள் மற்றும் சமூக நலன்புரிகள் மீதான அதிகரித்த அரச செலவினம் என்பனவற்றின் பின்னணியில் பொருளாதாரத்திற்கு கடுமையான சவால்களை ஏற்படுத்துவதனால் இவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்களவு கொள்கை நடவடிக்கைகள் அவசியமாகின்றன. எனவே, சமூகப் பொருளாதாரத்தின் பாதிக்கப்படும் தன்மைகளை சாத்தியமானளவிற்குக் குறைப்பதற்கு தேர்ச்சியை அதிகரிக்கின்ற முன்னெடுப்புக்கள், ஓய்வூதியத் திட்டமிடல் தொடர்பில் அறிவூட்டுதல், ஓய்வூதியத் திட்டங்களுக்கு பங்களிக்கும் விதத்தில் அவர்களது பங்கேற்பினை ஊக்குவித்தல் மற்றும் முதியோர் மருத்துவப் பராமரிப்பிற்கான தொழிற்படை தேர்ச்சியை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றினூடாக உற்பத்தி நடவடிக்கைகள் மீது வயது முதிர்ந்தோர் குடித்தெகையினரை ஈடுபடுத்துவதை நோக்கி கொள்கைகளை நெறிப்படுத்துவது அவசியமாகும்.

4 குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பீடு 2012 இனை அடிப்படையாகக் கொண்டது, தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

5 குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பீடு 2012 இனை அடிப்படையாகக் கொண்டது, தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

6 15 - 59 ஆண்டுகள் வயது வகையினைக் கொண்ட ஆட்களின் சதவீதமாக 60 ஆண்டுகளுக்கு மேல் வயதினைக் கொண்ட ஆட்களின் விகிதம்

## தொழிற்படை

**கடந்த ஐந்து ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக, 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் தொழிற்படை 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** 15 வயதிற்கும் அதற்கு மேலுமான பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள குடித்தொகையினர் என வரைவிலக்கணம் செய்யப்படும் தொழிற்படை[7] 2017இல் 2016இன் 8.311 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.567 மில்லியனாகக் காணப்பட்டது. ஊக்கம் தரும் விதத்தில் தொழிற்படையில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் தொழிலுள்ளவர்களின் குடித்தொகை 3.3 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் தொழிலின்மை குடித்தொகையினைக் குறைவடையச் செய்தமையானது பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புக்களில் அதிகரிப்பொன்று ஏற்பட்டமையை எடுத்துக்காட்டியது. எனினும், தொழிற்படையில் ஏற்பட்ட இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பு தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில்[8] ஒரு சிறிதளவு முன்னேற்றத்தினை மட்டுமே ஏற்படுத்தக்கூடியதாக இருந்தமைக்கு பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள மற்றும் செயற்பாடற்ற ஆட்கள் இரண்டையும் உள்ளடக்கிய வீட்டலகுக் குடித்தொகை விரிவடைந்தமையே

7 பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள குடித்தொகை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீடு இடம்பெற்ற தொடர்பான காலப்பகுதியில் தொழிலுள்ளோர் மற்றும் தொழிலற்றோரை உள்ளடக்குகிறது

8 தொழிற்படைப் பங்கேற்பு வீதம் என்பது 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்டதுமான வயதினைக் கொண்ட வீட்டலகு குடித்தொகையினருக்கான தொழிற்படையின் விகிதத்தினைக் குறிக்கிறது.

அட்டவணை 4.8


குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ) (ஆ)

| விடயம் | 2016 | 2017 (இ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 4 ஆம் காலாண்டு | ஆண்டு |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை '000 ஆட்கள் | 15,449 | 15,684 | 15,814 | 15,894 | 15,983 | 15,844 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,311 | 8,583 | 8,519 | 8,522 | 8,642 | 8,567 |
| தொழிலுள்ளோர் | 7,948 | 8,230 | 8,139 | 8,164 | 8,300 | 8,208 |
| தொழிலற்றோர் | 363 | 353 | 381 | 358 | 342 | 358 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ) | 53.8 | 54.7 | 53.9 | 53.6 | 54.1 | 54.1 |
| ஆண் | 75.1 | 75.1 | 74.6 | 73.6 | 74.9 | 74.5 |
| பெண் | 35.9 | 37.6 | 35.9 | 36.6 | 36.4 | 36.6 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(ஆ) 2016 யூலையில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தால் 2011 இலிருந்தவாறான மீள்நிறையிடப்பட்ட மற்றும் தொழிற்பட்டை திருத்தப்பட்ட தரவுகளை வெளியிட்டது
(இ) தற்காலிகமானது.
(ஈ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

வரைபடம் 4.5
தொழிற்படை மற்றும் தொழிலின்மையின் போக்குகள் (2012 - 2017)




குறிப்பு: 2012 இன் 1ஆம் காலாண்டுக்கான காலாண்டு ரீதியான தொழிற்படை அளவீடு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை


*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

காரணமாகும். எனவே, தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2016இன் 53.8 சதவீதத்திலிருந்து 2017இல் 54.1 சதவீதத்திற்கு மிதமாக மேம்பட்டது.

**2017இல் தொழிற்படைப் பங்கேற்பில் பால் இடைவெளி குறுக்கமடைந்த போதும் இது இன்னமும் ஆண்களின் தொழிற்படைக்கு மிகச் சாதகமானதொன்றாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.** 2017இல் ஆண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதம் 74.5 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 36.6 சதவீதமாகக் காணப்பட்டது. இதன் காரணமாக கல்வி அடைவுகளிலும் தொழில்சார் தகைமைகளிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற போதும் இலங்கையின் தொழிற்படையில் பெண்கள் தொடர்ந்தும் குறைந்தளவு பிரசன்னத்தையே கொண்டிருக்கின்றனர். தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் காலாண்டு தொழிற்படை அளவீட்டினால் அடையாளம் காணப்பட்டவாறு பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாமைக்கான முக்கிய காரணம் வீட்டுப்பணிகளில் அவர்கள் ஈடுபட்டிருப்பதேயாகும். தொழிற்சந்தை ஒழுங்குபடுத்தல்[9] மீதான வியாபாரத்தை மேற்கொள்ளுதல் தொடர்பான சுட்டெண் தரவுத் தளமானது சிங்கப்பூர், சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் வியட்நாம் போன்ற பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் இரவு வேலை மற்றும் மகப்பேற்று விடுப்பு என்பனவற்றிற்கான ஏற்பாட்டு நியதிகளில் இலங்கை பின்தங்கியிருப்பதனைப் பிரதிபலிக்கிறது. ஆகவே,

9 வியாபாரத்தினைச் செய்யுங்கள் சுட்டெண் உலக வங்கிக் குழுமத்தினால் திரட்டப்பட்டு வெளியிடப்படுவதுடன், தொழிற்சந்தை ஒழுங்குவிதிகள், துணைத் துறை ஆய்வுகள், ஊழியர்களின் ஒழுங்குவிதிகளுடன் நெகிழ்ச்சித்தன்மை பற்றிய, குறிப்பாக தவணை, தொழில், வேலை நேரம் மற்றும் தேவைக்கதிகமான விடயங்கள் தொடர்பில் ஆராய்கிறது

வரைபடம் 4.6
பால் அடிப்படையில் பொருளாதார ரீதியாக செயற்பாடில் இல்லாமல் இருப்பதற்கான காரணங்கள் (%) - 2016




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

முன்னர் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டப்பட்டதைப் போன்று பெண்களுக்கான தூண்டுதலளிக்கும் பணி நிலைமைகளை போதுமானளவிற்கு உருவாக்குவதற்கு தேசிய மட்டத்திலான கொள்கை தலையீடுகள் மிக முக்கியமானவையாகும். தாங்கக்கூடிய குழந்தைகள் நலக் கவனிப்பு, வயது வந்தோர் கவனிப்பு, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்ததும் பகுதிநேர வேலைகளைக் கொண்டதுமான ஒழுங்குகள் மற்றும் மேம்பட்ட போக்குவரத்து வசதிகள் என்பன அத்தகைய வசதிகளுக்குள் உள்ளடக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் எதிர்கால பயணம் பற்றிய திட்டங்களை மேலோட்டமாகக் குறிப்பிடும் அதன் பொருளாதாரக் கொள்கையான “தொலைநோக்கு 2025” குறைந்த பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அநேக நிவாரண வழிமுறைகளை அடையாளம் கண்டிருப்பதுடன் இவ்வழிமுறைகளை விரைந்து நடைமுறைக்கிடுவது விரும்பத்தக்க பொருளாதார தொலைநோக்கினை எய்துவதற்கு மிக இன்றியமையாததாகவிருக்கும். பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தினை அதிகரிப்பது உற்பத்திக் காரணியொன்றாக பெண்களின் நிரம்பலை அதிகரிப்பது மாத்திரமன்றி பால் பன்முகப்படுத்தல் தன்மையின் மூலம் புதிய தேர்ச்சி மற்றும் திறன் என்பனவற்றைக் கொண்டு வருவதனூடாக தொழிற்படையில் பெறுமானத்தினை உருவாக்கக்கூடிய தன்மையினையும் உயர்த்தும்.

## தொழில்நிலை

**பொருளாதாரத்திலுள்ள தொழில்நிலையில் அமைப்பியல் மாற்றம் இடம்பெற்றமைக்கிடையிலும் 2017இல் தொழிலிலுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.**

அட்டவணை 4.9
பொருளாதார செயற்பாடுகளின்படி தொழில்நிலை (அ) (ஆ) (இ)


| துறை | '000 நபர்கள் | | | | | | மொத்த தொழில் நிலையில் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 (ஈ) | | | | | 2016 | 2017 (ஈ) |
| | | 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 4 ஆம் காலாண்டு | ஆண்டு | | |
| **வேளாண்மை** | **2,154** | **2,222** | **2,114** | **1,984** | **2,241** | **2,140** | **27.1** | **26.1** |
| **கைத்தொழில்** | **2,098** | **2,306** | **2,301** | **2,372** | **2,346** | **2,331** | **26.4** | **28.4** |
| கல்லுடைத்தலும் சுரங்கம் அகழ்தலும் | 60 | 50 | 50 | 74 | 79 | 63 | 0.8 | 0.8 |
| தயாரிப்பு | 1,421 | 1,572 | 1,549 | 1,586 | 1,616 | 1,581 | 17.9 | 19.3 |
| கட்டடவாக்கம், மின்வலு, வாயு, நீராவி, குளிரூட்டப்பட்ட வழங்கல், நீர் வழங்கல், கழிவு நீர் அமைப்பு, கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் மாசடைதலை தவிர்க்கும் நடவடிக்கைகள் | 617 | 685 | 702 | 712 | 651 | 688 | 7.8 | 8.4 |
| **பணிகள்** | **3,696** | **3,702** | **3,723** | **3,808** | **3,713** | **3,737** | **46.5** | **45.5** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருளிகளில் பழுதுபார்த்தல் | 1,102 | 1,083 | 1,200 | 1,216 | 1,142 | 1,160 | 13.9 | 14.1 |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 516 | 502 | 515 | 530 | 506 | 513 | 6.5 | 6.3 |
| வதிவிடம் மற்றும் உணவுச் சேவை நடவடிக்கைகள் | 203 | 194 | 203 | 248 | 197 | 210 | 2.6 | 2.6 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் | 62 | 70 | 61 | 76 | 74 | 70 | 0.8 | 0.9 |
| நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | 159 | 154 | 146 | 177 | 162 | 160 | 2.0 | 1.9 |
| தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் | 55 | 60 | 60 | 63 | 95 | 70 | 0.7 | 0.8 |
| நிர்வாகம் மற்றும் துணைச்சேவை நடவடிக்கைகள் | 107 | 126 | 121 | 151 | 211 | 152 | 1.4 | 1.9 |
| பொது நிர்வாகம் மற்றும் கட்டாய சமூக பாதுகாப்பு சமூக பாதுகாப்பு | 609 | 617 | 578 | 535 | 377 | 527 | 7.7 | 6.4 |
| கல்வி | 344 | 380 | 345 | 368 | 416 | 377 | 4.3 | 4.6 |
| மனிதநல மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 142 | 146 | 155 | 136 | 161 | 149 | 1.8 | 1.8 |
| ஏனையவை (உ) | 397 | 371 | 339 | 309 | 371 | 348 | 5.0 | 4.2 |
| **மொத்த தொழில்நிலை** | **7,948** | **8,230** | **8,139** | **8,164** | **8,300** | **8,208** | **100.0** | **100.0** |
| தொழிற்படையின் சதவீதமாக | 95.6 | 95.9 | 95.5 | 95.8 | 96.0 | 95.8 | | |

(அ) பன்னாட்டு தர கைத்தொழில் வகைப்படுத்தல் - திருத்தம் 4 இனை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(இ) 2016 யூலையில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் 2011 இலிருந்தவாறான மீள்நிறையிடப்பட்ட மற்றும் திருத்தியமைக்கப்பட்ட தொழிற்படை தரவுகளை வெளியிட்டது.
(ஈ) தற்காலிகமானது.
(உ) தொழில் வழங்குநர்களாக குடியிருப்புகளின் நடவடிக்கைகள், மெய் ஆதனங்கள், கலை, கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு, ஆட்சிப் பகுதிக்கு அப்பால் உள்ள நிறுவனங்கள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளடங்கலாக

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

2017இல் தொழிலிலுள்ளவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 7.948 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.208 மில்லியனுக்கு 3.3 சதவீதத்தினால் அதிகரித்தது. பணிகள் துறை பொருளாதாரத்தில் தொடர்ந்தும் தொழிலினை உருவாக்குகின்றதொரு முக்கிய துறையாக விளங்கி 2017இல் மொத்தத் தொழில் வாய்ப்பில் 45.5 சதவீதப் பங்கிற்கு பங்களித்தது. பணித் துறைக்குள் தொழில் வாய்ப்பின் உயர்ந்த பங்கு மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை வர்த்தகம், உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருளிகளின் திருத்த வேலைகளில் பதிவுசெய்யப்பட்டு மொத்தத் தொழில் வாய்ப்பில் 14.1 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தியது. 2017இல் மொத்தத் தொழில் வாய்ப்பில் கைத்தொழில் துறையின் பங்கு 28.4 சதவீதமாக இருந்தது. கைத்தொழில் துறைக்குள் தயாரிப்புத் துணைத் துறை தொழில் வாய்ப்பின் மிகப் பெரும் பங்கிற்கு வகைகூறி மொத்தத் தொழில் வாய்ப்பில் 19.3 சதவீதத்தைப் பிரசன்னப்படுத்தியது. எனினும், வேளாண்மைத் துறையில் தொழில் வாய்ப்பு வீழ்ச்சியடைந்தமைக்கு இக்காலப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக தொடர்ச்சியான தடங்கல்களின் விளைவாக வேளாண்மை நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கமே காரணமாகும். இதன்படி, 2017இல் வேளாண்மைத் துறையில் தொழிலிலுள்ள குடித்தொகையினரின் பங்கு 2016இல் பதிவுசெய்யப்பட்ட 27.1

வரைபடம் 4.7
பால் ரீதியில் தொழிற்படை பங்களிப்பு (%) - 2016




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 4.10
தொழில்நிலைத் தகைமை (அ) (ஆ)

நபர்கள்

| காலம் | பொதுத்துறை ஊளியர்கள் | தனியார் துறை ஊழியர்கள் | தொழில் வழங்குநர்கள் | சுயவேலை செய்வோா | கொடுப்பனவற்ற குடும்ப தொழிலாளர்கள | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2016 | 1,157,658 | 3,437,919 | 217,215 | 2,511,750 | 623,141 | 7,947,683 |
| **2017 (இ)** | **1,178,708** | **3,555,323** | **247,470** | **2,571,023** | **655,655** | **8,208,179** |
| 1 ஆம் காலாண்டு | 1,215,187 | 3,572,361 | 258,117 | 2,504,860 | 679,682 | 8,230,207 |
| 2 ஆம் காலாண்டு | 1,162,738 | 3,513,026 | 237,563 | 2,601,122 | 624,280 | 8,138,728 |
| 3 ஆம் காலாண்டு | 1,146,652 | 3,539,312 | 264,456 | 2,513,366 | 700,083 | 8,163,869 |
| 4 ஆம் காலாண்டு | 1,190,257 | 3,596,593 | 229,743 | 2,664,743 | 618,574 | 8,299,911 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித் தொகை
(ஆ) 2016 யூலையில் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் 2011 இலிருந்த வாறான மீள்நிறையிடப்பட்ட மற்றும் திருத்தியமைக்கப்பட்ட தொழிற்படை தரவுகளை வெளியிட்டது.
(இ) தற்காலிகமானது.

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

சதவீதத்திலிருந்து 26.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2017 காலப்பகுதியின் மூன்றாம் காலாண்டில் வேளாண்மைத் துறையில் தொழிலுள்ள குடித்தொகையினரின் பங்கு முன்னெப்பொழுதுமில்லாத அளவிற்குக் குறைவடைந்து இது இதேகாலப்பகுதியின் வேளாண்மை நடவடிக்கைகளின் எதிர்கணியமான வளர்ச்சியைப் பிரதிபலித்தது.

**உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் உண்மையான எண்ணிக்கை நியதிகளில் 2017இல் அனைத்து வகைகளிலும் அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும் தனியார் துறை தொழில்நிலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.** இதன்படி, 2017இல் மொத்த தொழில் நிலை உருவாக்கத்தில் 43.3 சதவீதப் பங்கினைக் கொண்டிருக்கும் தனியார் துறையில் உருவாக்கப்பட்ட புதிய தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை 117,405 ஆகக் காணப்பட்டது. மேலும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் உண்மையான நியதிகளில் சுயதொழில் வாய்ப்பு வகை 59,273 இனால் அதிகரிக்கப்பட்டது. சுயதொழில் வாய்ப்பு மற்றும் தொழில்தருநர் வகைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ஒன்றுசேர்ந்து தொழில் வாய்ப்புக்களில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் 34 சதவீதத்திற்கு பங்களித்தது. இது, நாட்டில் புதிய வியாபார வாய்ப்புக்கள் மற்றும் தொழில் முயற்சியாண்மை என்பன உருவாக்கப்பட்டமையை எடுத்துக்காட்டியது. இது, அடுத்துவரும் காலப்பகுதியில் கூடியளவு தொழில் வாய்ப்புக்களையும் மற்றும் பல பொருளாதார நன்மைகளையும் தோற்றுவிக்கும். 2017இல் பாதிக்கப்படக்கூடிய தொழில்நிலை[10] மொத்தத் தொழில்நிலையில் 39.3 சதவீதத்தினைப் பதிவுசெய்து உலகளாவிய சராசரியான 42 சதவீதத்திற்கு[11] அண்மித்ததாகக் காணப்பட்டது. இவ்வகையில் தொழில் புரியும் ஆட்கள், ஏதேனும் தொழிலாளர் ஒழுங்குவிதிகளினால் மிகக் குறைந்தளவில் ஆளப்படுபவர்களாக அல்லது கௌரவமான பணிபுரியும் சூழலை அணுகமுடியாதவர்களாக இருந்தனர்.

அட்டவணை 4.11
அரசதுறை தொழில்நிலை

| துறை | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) | சதவீத மாற்றம் 2016/ 2015 (அ) | சதவீத மாற்றம் 2017/ 2016 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அரசு (இ) | 1,136,656 | 1,146,995 | 1,149,867 | 0.9 | 0.3 |
| அரசுசார் (ஈ) | 238,474 | 242,772 | 244,305 | 1.8 | 0.6 |
| **அரசதுறை** | **1,375,130** | **1,389,767** | **1,394,172** | **1.1** | **0.3** |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(ஈ) அரசகூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகள் மற்றும் அரச அதிகார சபைக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

10 பாதிக்கப்படும் தொழில்நிலை என்பது சொந்தத் தொழில் புரிபவர்கள் மற்றும் குடும்பங்களுக்குப் பங்களிக்கின்ற குடும்ப வேலையாட்களென பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு வரைவிலக்கணம் செய்கிறது.

11 World Employment Social Outlook - Trends 2018, International Labour Organisation


வரைபடம் 4.8
தொழிலின்மை வீதம் (%)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

4

வரைபடம் 4.9
தொழிலின்மை வீதம் (%) - 2017




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

**அதேவேளை இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட பொதுத் துறை தொழில் நிலை அளவீட்டின்படி மொத்தப் பொதுத் துறை தொழில்நிலை 2016இன் 1,389,767 உடன் ஒப்பிடுகையில் 2017இன் இறுதியில் 1,394,172 ஆகக் காணப்பட்டது.** இது, அமைச்சுக்கள் திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள் மற்றும் அரசுசார் நிறுவனங்களிலுள்ள ஊழியர்களை உள்ளடக்குகிறது.

## தொழிலின்மை

**பெண்கள் தொழிலின்மை வீதத்தின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் 2017இன் தொழிலின்மை வீதம் 2016இன் 4.4 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** 2017இன் மொத்த தொழிற்படை மற்றும் தொழிலுள்ள குடித்தொகை 2016 உடன் ஒப்பிடுகையில் முறையே 3.1 சதவீதத்தினாலும் 3.3 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்து இக்காலப்பகுதியில் தொழிலற்ற ஆட்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட வழிவகுத்தது. 2017இல் ஆண்களின் தொழிலின்மை வீதம் 2.9 சதவீதமாக மாற்றமடையாது இருந்த வேளையில் பெண்களின் தொழிலின்மை வீதம் 2016இன் 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.5 சதவீதத்திற்குக் குறைவடைந்து காணப்பட்டது.

**பொதுவாக குறைந்த தொழிலின்மை வீதம் காணப்பட்டமைக்கிடையிலும் இளைஞர், கல்விகற்ற தகைமை வாய்ந்தவர்கள் மற்றும் பெண்களிடையே தொழிலின்மை வீதம் தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டது. உயர்ந்தமட்ட தொழிலின்மை வீதம் தொடர்ந்தும் க.பொ.த (உயர்தரம்) மற்றும் அதற்கு மேலேயுள்ள வகைகளில் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டதுடன் 8.1 சதவீதமாக 2017இல் காணப்பட்டது.** இளைஞர் (15 - 24 ஆண்டுகள்) தொழிலின்மை வீதம் 2016இன் 21.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 18.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 30 வயதிற்கு மேற்பட்ட ஆட்களிடையேயான தொழிலின்மை வீதம் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டமைக்கு உயர்ந்த வேலை அனுபவங்கள் மற்றும் தேர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பனவற்றின் விளைவாக அவர்களது தொழிலைத் தேடிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தமை காரணமாக அமைந்தது. இளைஞர் மற்றும் கல்வித் தகைமையைப் பெற்றவர்களிடையேயான உயர்ந்த தொழிலின்மைக்கான அடிப்படைக் காரணிகளாக தேர்ச்சி பெற்ற தொழில்கள் மட்டுப்படுத்தப்பட்டளவில் உருவாக்கப்படுவதும் அதேபோன்று

அட்டவணை 4.12
தொழிலின்மை (அ) (ஆ)

| வகை | 2016 | 2017 (இ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 4 ஆம் காலாண்டு | ஆண்டு |
| அனைத்து | 4.4 | 4.1 | 4.5 | 4.2 | 4.0 | 4.2 |
| பால் வகைப்படி | | | | | | |
| ஆண் | 2.9 | 2.7 | 3.0 | 2.7 | 3.0 | 2.9 |
| பெண் | 7.0 | 6.5 | 7.1 | 6.8 | 5.6 | 6.5 |
| கல்விமட்ட அடிப்படையில் | | | | | | |
| ஆண்டு 5 மற்றும் அதற்கு கீழ் | ... | ... | ... | ... | ... | ... |
| ஆண்டு 6-10 | 3.3 | 2.9 | 3.5 | 2.4 | 2.3 | 2.8 |
| கா.பொ.த (சா/த) | 5.8 | 5.7 | 6.0 | 6.0 | 5.8 | 5.9 |
| கா.பொ.த (உ/த) மற்றும் அதற்கு மேல் | 8.3 | 7.8 | 8.2 | 8.5 | 7.9 | 8.1 |
| வயது அடிப்படையில் | | | | | | |
| 15-19 | 27.1 | 22.1 | 25.6 | 16.1 | 20.6 | 21.1 |
| 20-24 | 19.9 | 17.4 | 18.4 | 19.0 | 16.6 | 17.8 |
| 25-29 | 9.2 | 8.0 | 11.3 | 9.8 | 8.9 | 9.5 |
| 30-39 | 2.4 | 2.9 | 2.5 | 3.2 | 2.2 | 2.7 |
| 40 உம் அதற்கு மேலும் | 0.8 | 1.0 | 0.9 | 0.8 | 1.0 | 0.9 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(ஆ) 2016 யூலையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் 2011 இலிருந்தவாறான மீள்நிறையிடப்பட்ட மற்றும் திருத்தியமைக்கப்பட்ட தொழிற்படை தரவுகளை வெளியிட்டது.
(இ) தற்காலிகமானது.

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


தொழில் சந்தைத் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான விதத்தில் தொழிலாளர்கள் நிரம்பல் செய்யப்படுவது போதுமான அளவில் இல்லாமையுமே காரணங்களாக இருக்கமுடியும். மறுபுறத்தில் ஆரம்பப் பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரை பொதுமக்களுக்கு சமத்துவமான இலவசமான கல்வியை வழங்கக்கூடியதாக கல்வி முறைமைகள் இருக்கின்ற போதும் இலங்கையின் கல்வி, தொழில்பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி முறைமைகள் பொருளாதாரத்தின் தொடர்பான துறைகளினால் கோரப்படுகின்ற தேர்ச்சியை உருவாக்கும் நியதிகளில் வரலாற்றிலே மிகக் குறைந்த செயலாற்றத்தினைக் கொண்டிருக்கின்றன. எனவே, முறைசார்ந்த கல்வியையும் தொழில் பயிற்சியையும் தொழில் சந்தைத் தேவைப்பாடுகளுடன் பொருத்தம் செய்வது அவசரமானதாகவுள்ளது. பொதுவான குறிக்கோள்களுடன் கல்வி மற்றும் பயிற்சி முறைமைகள்/ அமைப்புக்கள் தொடர்பில் நடைமுறைப்படுத்தும் கடுமையான பொறுப்பாண்மைகளை உள்நாட்டு தொழிலாளர் சந்தைக்கு தேர்ச்சிகளுடன் போதுமான தொழிலாளர்களை நிரம்பல் செய்வதற்காகத் தளர்த்துவது அவசியமானதாகும். அதேநேரம் தனியார் மற்றும் அரச துறை கைத்தொழில் பங்கேற்பாளர்கள் தொழிலாளர் தேவைப்படும் துறைகளையும் கிடைக்கத்தக்க தொழிலாளர்களை பெறக்கூடிய தன்மையினையும் அடையாளம் காண்பதற்கு ஒத்துழைத்தல் வேண்டும். அத்தகையதொரு சூழலில் பாரம்பரியமான கற்பித்தல், மற்றும் பயிற்சி முறைகள் மாற்றப்படுவது அவசியமானதாக இருப்பதுடன் மாற்றமடைந்துவரும் பரிமாணங்களுக்கேற்ப பொருத்தமான நடைமுறைகளை நிறுவனங்களும் பயிற்சியாளர்களும் பின்பற்ற வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

**தொழில் உருவாக்குவோரின் தேவைப்பாடுகளுக்கும் தொழில் நாடுவோரின் எதிர்பார்ப்புக்களுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் பாரிய இடைவெளி உள்நாட்டுச் சந்தையில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கின்றது.** இது வியாபார மனோபாவ அளவீட்டில் கண்டறியப்பட்டவற்றின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இங்கு தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆர்வம் பெருமளவிற்குச் சாதகமானதாக இருக்கின்ற போதும் தொழிலாளர் கிடைப்பனவு பற்றாக்குறையானதாகக் காணப்படுகிறது. மேலும், 2017இல் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தொழிலாளர் கேள்வி அளவீட்டின்படி 2017 யூனில் உள்ளவாறு ஏறத்தாழ 0.5 மில்லியன் வெற்றிடங்களை நிரப்புவதில் காணப்படும் இடர்ப்பாடுகளுக்கு குறிப்பிட்ட தொழில்களைப் புரிவதற்கு ஆர்வம் காட்டும் மக்கள் கிடைக்காமை இருப்பதும் ஏனைய தொழில்தருநர்களிடமிருந்தான உயர்ந்த போட்டியும் உயர்ந்த சம்பளங்களுக்கான கேள்வியும் நாட்டில் நீண்ட காலமாக நிலவுகின்ற தேர்ச்சி இடைவெளியின் விளைவாக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரிகள் கிடைக்காமை இருப்பதும் முக்கியமான காரணங்களாக விளங்குகின்றன. தொழிலாளர் பற்றாக்குறைப் பிரச்சனையினை சரியான நேரத்தில் கட்டுப்படுத்தாதுவிடின், தொடர்ச்சியான தேர்ச்சி இடைவெளியும் தொழிலாளர் பற்றாக்குறை தொடர்ச்சியாகக் காணப்படும் துறைகள் தொழிலாளர்களை இறக்குமதி செய்வதற்கான அரசாங்கத்தின் அனுமதியைத் தொடர்ச்சியாகக் கோரலாம். தொழிலாளர் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை வழிமுறைகளின் நியதிகளில் சமூக ரீதியில் அங்கீகரிக்கப்படாத சில வகையான தொழில்களை நோக்கி தொழிலை எதிர்பார்ப்போரை ஈர்ப்பதற்கு தொழில் அங்கீகரிப்புத் தன்மையொன்றினை அறிமுகப்படுத்த முடியும். மேலும், வழக்கத்தில் இல்லாத தொழிலாளர் சட்டங்களைப் பொறுத்தவரையில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நடைமுறைக்கிடுவதற்கும் தொழிலாளர் ஆலோசனை சபைகளில் இளைஞர்களுக்கு பிரதிநிதித்துவத்தினை வழங்குவதற்கும் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் கேள்வியினால் தூண்டப்பட்ட பயிற்சிகளை வழங்குவதற்கும் தற்போதுள்ள தொழிற்படைக்கு தேர்ச்சியை அதிகரிப்பதற்கும் மீள்தேர்ச்சியை வழங்குவதற்கும் பயிற்சி அல்லது முன்அனுபவத்தின் அடிப்படையில் சான்றுபடுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும். மனித மூலவளம் இலங்கையின் முக்கியமானதொரு பலமாக அடையாளம் காணப்பட்டிருப்பதனால் பொருளாதாரத்தின் விரும்பத்தக்க வளர்ச்சி உத்வேகத்தினை எய்துவதனை நோக்கி உள்நாட்டுத் தொழிற்படை மற்றும் கிராமியத்துறை இளைஞர்களில் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளங்களை உத்தம அளவில் பயன்படுத்துவதற்காக அவற்றின் இயலாற்றலை மேலும் மேம்படுத்துவது அவசியமானதாகும்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**2017இல் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக வெளிச்சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 2016 உடன் ஒப்பிடுகையில் 12.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** 2014

வரைபடம் 4.10
திறமை அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்




*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

4

அட்டவணை 4.13
வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

| வெளிநாட்டு தொழில்வாய்ப்பு | 2015 | | 2016 (அ) | | 2017 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு சதவீதம் | எண்ணிக்கை | பங்கு சதவீதம் | எண்ணிக்கை | பங்கு சதவீதம் |
| **மொத்த தொழிலிலுள்ளோர்** | **263,443** | **100.0** | **242,816** | **100.0** | **212,162** | **100.0** |
| **மூலத்தின்படி** | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 116,749 | 44.3 | 87,982 | 36.2 | 68,564 | 32.3 |
| ஏனையோர் | 146,694 | 55.7 | 154,834 | 63.8 | 143,598 | 67.7 |
| **பால் வகையின்படி** | | | | | | |
| ஆண்கள் | 172,788 | 65.6 | 160,306 | 66.0 | 139,271 | 65.6 |
| பெண்கள் | 90,655 | 34.4 | 82,510 | 34.0 | 72,891 | 34.4 |
| **மனிதவலு வகையின் படி** | | | | | | |
| தொழில் வல்லுனர்கள் | 6,251 | 2.4 | 6,578 | 2.7 | 6,371 | 3.0 |
| நடுத்தர மட்டம் | 6,951 | 2.6 | 8,234 | 3.4 | 7,124 | 3.4 |
| எழுத்துவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 12,501 | 4.7 | 10,862 | 4.5 | 9,265 | 4.4 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 81,682 | 31.0 | 76,545 | 31.5 | 68,993 | 32.5 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 4,847 | 1.8 | 3,926 | 1.6 | 3,295 | 1.6 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 77,985 | 29.6 | 71,656 | 29.5 | 61,057 | 28.8 |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 73,226 | 27.8 | 65,015 | 26.8 | 56,057 | 26.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

இலிருந்து வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக சென்றவர்களில் தொடர்ச்சியான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமைக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் குறிப்பாக வீட்டுப் பணிப்பெண் வகையினரின் வெளிச்செல்கையைக் குறைக்கும் நோக்குடன் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகளே முக்கிய காரணமாகும். வெளிநாட்டுச் சந்தைகளில் குறிப்பாக மத்திய கிழக்கில் புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளும் குறைந்த கேள்வியும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான வெளிச்செல்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டிருந்தன. நாட்டிற்குள் பல்வேறுபட்ட துறைகளில் தொழிலாளர்களுக்குக் காணப்பட்ட அதிகரித்த கேள்வியும் அவதானிக்கப்பட்ட இவ்வீழ்ச்சிக்குக் காரணமாகவிருக்கும். இதன்படி, வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 2016இன் 242,816 உடன் ஒப்பிடுகையில் 2017இல் 212,162 ஆகக் காணப்பட்டது. வெளிச்சென்ற பெண்களின் தொகை 2016 உடன் ஒப்பிடுகையில் 2017இல் 72,891 இற்கு 11.7 சதவீதத்தினாலும் வெளிச்சென்ற ஆண்களின் எண்ணிக்கை 139,271 இற்கு 13.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக வெளிச்சென்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் பெண்கள் ஏறத்தாழ 34 சதவீதத்தைக் கொண்டிருந்தனர். இது ஒரு தசாப்தத்திற்கு முன்னர் 53 சதவீதம் கொண்ட வீட்டுப்பணிப் பெண்களின் பிரசன்னப்படுத்தலுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவானதொன்றாகும்.

**தேர்ச்சி மட்டங்களின் நியதிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளிச்செல்வோரின் எண்ணிக்கை அனைத்து வகைகளிலும் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது.** "பாதுகாப்பான தேர்ச்சியடைந்த புலம்பெயர்தல்" இனை நோக்கிய அதிகாரிகளின் உபாயமிக்கப் பணிப்புரையின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் தேர்ச்சியற்ற மற்றும் வீட்டுப் பணிப்பெண் வகையினர் மொத்த வெளிச்செல்கையில் ஏறத்தாழ 55 சதவீதத்திற்கு இன்னமும் வகைகூறுகின்றனர். மூன்று சதவீதமான தொழிலாளர் வெளிச்செல்கைகள் மாத்திரமே தொழில்சார் நிபுணத்துவ வகையின் கீழ் காணப்பட்டதுடன் 3.4 சதவீதமான தொழிலாளர் வெளிச்செல்கைகள் நடுத்தர மட்ட வகையில் காணப்பட்டன. அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரங்களை உருவாக்குவதன் மீது அதிகளவு கவனத்தினை தற்பொழுது செலுத்திவரும் வளைகுடா பொருளாதாரங்கள் உட்பட பல நாடுகளில் தொழில் நிபுணத்துவம் மிக்க மற்றும் தேர்ச்சி பெற்ற ஊழியர்களுக்கான கேள்வி அதிகரித்து வருகின்ற போதும் 2016 உடன் ஒப்பிடுகையில் 2017இல் தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் நடுத்தர மட்ட

அட்டவணை 4.14
நாடுகளின் அடிப்படையில் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

| நாடு | 2016 (அ) | | 2017 (ஆ) | | மாற்றம் (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | சதவீதம் |
| சவுதி அரேபியா | 63,293 | 26.1 | 37,900 | 17.9 | -25,393 | -40.1 |
| கட்டார் | 59,523 | 24.5 | 56,644 | 26.7 | -2,879 | -4.8 |
| குவைத் | 32,400 | 13.3 | 37,420 | 17.6 | 5,020 | 15.5 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 40,117 | 16.5 | 36,657 | 17.3 | -3,460 | -8.6 |
| ஏனையவை | 47,483 | 19.6 | 43,541 | 20.5 | -3,942 | -8.3 |
| **மொத்தம்** | **242,816** | **100.0** | **212,162** | **100.0** | **-30,654** | **-12.6** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

வகையினருக்கான வெளிச்செல்கைகள் வீழ்ச்சியைக் காட்டியமை குறிப்பிட்டதொரு அம்சமாகக் காணப்படுகிறது. அதிகாரிகள் பதிவுசெய்யப்பட்ட முகவர்களினூடாக தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு தொடர்ச்சியாக முயற்சித்த போதும் 68 சதவீதமான புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாட்டு தொழிற் சந்தைகளை அணுகுவதற்கு தனிப்பட்ட மூலங்களையே பயன்படுத்தியுள்ளனர். இது தொழிலாளர் உரிமைகள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள சமூக ரீதியில் தீங்கிழைக்கும் விடயங்கள் தொடர்பில் ஏற்படும் போதுமானளவு பாதுகாப்பின்மை காரணமாக வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களில் பாதிக்கப்படக்கூடிய தன்மையை ஏற்படுத்தக்கூடும். 2017இல் இலங்கையர்கள் 108 நாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிருப்பதுடன் அவற்றில் 90 சதவீதத்தினர் மத்திய கிழக்கில் தொழில்புரிகின்றனர். இதன் காரணமாக புலம்பெயர் நாடுகளிடையே இந்நாடுகள் தொடர்ந்தும் முனைப்பானவையாகக் காணப்படுகின்றன. 2017 யூனில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பாரேன், எகிப்து போன்ற பல நாடுகள் தொழிலை எதிர்பார்க்கும் இலங்கையர்களுக்கு காற்பங்கிலும் கூடுதலானவர்களுக்கு ஆண்டுதோறும் தொழில் வசதிகளை வழங்கும் கட்டாருடனான இராஜதந்திர தொடர்புகளைத் துண்டித்திருக்கின்றன. இதன் விளைவாக, கட்டாருக்கு புலம்பெயர்ந் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2016இன் 59,523 உடன் ஒப்பிடுகையில் 2017இல் 56,644 இற்கு வீழ்ச்சியடைந்தது.

**தொழிலாளர் பணவனுப்பல்களின் மீது இலங்கையின் பொருளாதாரம் தங்கியிருப்பதனைக் குறைத்தல் வேண்டும்.** இளைஞர்களிடையேயான உயர்ந்த தொழில் வாய்ப்பின்மை போன்ற சமூகப் பொருளாதார விடயங்கள், உள்நாட்டு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்காக வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் விதத்தில் தேசிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பல மத்திய கிழக்கு நாடுகளைத் தூண்டுகின்றன. இத்தகையதொரு சூழலில் இச்சந்தைகளில் தொழில்களை இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்கள் தோன்றக்கூடும். மேலும், தேர்ச்சியடைந்த தொழிலாளர்களுக்கான அதிகரித்துவரும் கேள்வி மற்றும் தொழிலாளர் செலவுகளைக் குறைப்பதற்காக தொழில்நுட்பங்களின் மீது பாரியளவு முதலீடுகளை மேற்கொள்வது அண்மைய எதிர்காலத்தில் இலங்கையர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தக்கூடும். எனவே, தொழில் பயிற்சி மற்றும் தொழில்சார் பயிற்சி முறைமைகளை பன்னாட்டு நியமங்களுடன் பொருந்தும் விதத்தில் மேற்கொள்வது மிக முக்கியமானதாகும். இதன் மூலம் தற்போதுள்ள சந்தைகளிலும் அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள புதிய சந்தைகளிலும் உயர்தரம் கொண்ட தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை, தேர்ச்சியற்ற மற்றும் நடுத்தர மட்ட வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்ப்போரில் கணிசமான வீதத்தினரை ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த கூலிகள் காணப்பட்ட போதும் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறையினை எதிர்நோக்குகின்ற உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு வழிப்படுத்த முடியும். இத்தகையதொரு பொதுவான பின்னணியில் ஏற்றுமதி இயலாற்றலையும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் படிப்படியாக மேம்படுத்துவதன் மூலம் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீது அளவுக்கதிகமாகத் தங்கியிருப்பதனை தளர்த்துவதற்கு நீண்ட கால வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தொழிலாளர் புலம்பெயர் செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்ற அதேவேளையில் புலம்பெயர் தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் வலுவூட்டியும் வருகிறது.** புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களுக்காக பயனுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் 2017ஆம் ஆண்டில் சட்டத்திற்கு முரணான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை கண்டுபிடிக்கும் விதத்தில் 224 திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டது. இது, 2016 உடன் ஒப்பிடுகையில் 27 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 2017இல் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் இத்தொழில் துறையினை ஒழுங்குமுறைப்படுத்தும் அதன் பொறுப்பாண்மையினைப் பயன்படுத்தி சட்டத்திற்கு மாறான முகவர்களுக்கும் உரிமம் பெற்ற முகவர்களின் சட்டத்தை மீறும் செயற்பாடுகளுக்கெதிராக 239 நீதிமன்ற வழக்குகளை தொடுத்தது. புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பான நலன்புரி வழிமுறையொன்றாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 2017இல் 212,470 புலம்பெயர் வேலையாட்களை உள்ளடக்கிய காப்புறுதித் திட்டமொன்றிற்காக ரூ.139.2 மில்லியன் மொத்தத் தொகையினைச் செலுத்தியது. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.78.8 மில்லியன் கொண்ட காப்புறுதித் திட்டத்தினையும் தொழிலாளர் நலன்புரி நிதியத்தினையும் பயன்படுத்தி மொத்தமாக 1,966 புலம்பெயர் வேலையாட்கள் அவர்கள் பணியாற்றிய நாடுகளில் எதிர்கொண்ட பிரச்சனைகளின் காரணமாக நாட்டிற்குத் திரும்ப அழைக்கப்பட்டனர். நாடளாவிய புலம்பெயர் தொழிலாளர் வலையமைப்பினை வசதிப்படுத்தும் நோக்குடன் புலம்பெயர் வேலையாட்களின் உயர்ந்தளவு வெளிப்பாய்ச்சல்களைக் கொண்ட மாகாணங்களில் புலம்பெயர் வள நிலையங்களை நிறுவுவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டவணை 4.15
தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்

| ஆண்டு | பெருந்தோட்டம் | | | ஏனையவை (அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை த்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2014 | 21 | 4,833 | 29,165 | 7 | 1,618 | 8,158 | 38 | 6,451 | 37,323 |
| 2015 | 31 | 10,427 | 70,697 | 20 | 4,488 | 11,597 | 51 | 14,915 | 82,294 |
| **2016 (ஆ)** | **26** | **11,185** | **85,637** | **15** | **10,167** | **18,690** | **41** | **21,352** | **104,327** |
| 1ஆம் காலாண்டு | 11 | 3,876 | 26,083 | 2 | 4,350 | 8,700 | 13 | 8,226 | 34,783 |
| 2ஆம் காலாண்டு | 6 | 2,380 | 14,661 | 8 | 3,022 | 5,775 | 14 | 5,402 | 20,436 |
| 3ஆம் காலாண்டு | 3 | 533 | 2,877 | 4 | 2.773 | 4,193 | 7 | 3,306 | 7,070 |
| 4ஆம் காலாண்டு | 6 | 4,396 | 42,016 | 1 | 22 | 22 | 7 | 4,418 | 42,038 |
| **2017 (இ)** | **12** | **1,885** | **5,643** | **20** | **8,427** | **52,636** | **32** | **10,312** | **58,279** |
| 1ஆம் காலாண்டு | 3 | 343 | 1,011 | 9 | 3,344 | 23,258 | 12 | 3,687 | 24,269 |
| 2ஆம் காலாண்டு | 6 | 767 | 2,632 | 6 | 2,401 | 6,452 | 12 | 3,168 | 9,084 |
| 3ஆம் காலாண்டு | 1 | 335 | 1,340 | 5 | 2,682 | 22,926 | 6 | 3,017 | 24,266 |
| 4ஆம் காலாண்டு | 2 | 440 | 660 | - | - | - | 2 | 440 | 660 |

(அ) அரச சார்நிறுவனங்களும் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொழில் திணைக்களம்



## தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள்

**வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை அதில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை, இழக்கப்பட்ட மனித வேலைநாட்களின் எண்ணிக்கை என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் தனியார் துறையின் தொழில் உறவுகள் மேம்பட்டன.** இதன்படி, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் வேலை நிறுத்தங்களின் காரணமாக மொத்தமாக 10,312 வேலையாட்கள் ஈடுபட்ட 32 வேலை நிறுத்தங்களும் 58,279 மனித வேலை நாட்களும் இழக்கப்பட்டன. இதற்கு 2017இல் பெருந்தோட்டத் துறை தவிர்ந்த மற்றைய துறைகளே முக்கியமாகப் பங்களித்தன. எனினும், இத்தரவுகள் தொழில் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட தனியார் கைத்தொழில்களின் வேலை நிறுத்தங்களை மாத்திரமே எடுத்துக்காட்டுகின்றன. இவ்வறிவிக்கப்பட்ட வேலை நிறுத்தங்களைத் தவிர பகிரங்கமாக கிடைக்கத்தக்கதான தரவுகள் நலம், கல்வி, பெற்றோலியம், அஞ்சல் மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளில் இடம்பெற்ற பல எண்ணிக்கையான வேலை நிறுத்தங்களை (2017ஆம் ஆண்டுப்பகுதியில் 16 வேலை நிறுத்தங்கள்) எடுத்துக்காட்டின. இது, பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையிலும் நாட்டின் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளிலும் குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கங்களை கொண்டிருந்திருக்கின்றன.

**தனியார் துறையில் சிறந்த பணிச் சூழலை நிறுவும் நோக்குடன் 2017இல் வேலைத்தல ஒத்துழைப்பு மற்றும் கைத்தொழில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சினால் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இலங்கையில் குழந்தைகள் தொழிலாளர்களை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்குடன் 2017 செத்தெம்பர் 8ஆம் நாளன்று இலங்கையில் குழந்தைகள் தொழிலாளர்களை ஒழிப்பது தொடர்பில் தேசிய கொள்கையொன்று ஆரம்பிக்கப்பட்டது. மேலும், தனியார் துறையிலுள்ள பெண் வேலையாட்களுக்காக பிரசவ நன்மைகளை மூன்றிலிருந்து அடுத்துவரும் பிள்ளைகளுக்கும் விரிவாக்குவதற்கும் தனியார் துறை தயாரிப்புக் கைத்தொழிலில் வாரத்திற்கு ஐந்து நாட்களுக்கு தொழில்புரியும் மணித்தியாலங்களை பரப்பியமைக்கும் விதத்தில் நிருவாக தளர்த்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தேசிய தொழிலாளர் ஆணைக்குழுவின் ஆலோசனையினூடாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கட்டாயக் கல்வியை 16 வயது வரை அதிகரிப்பதற்கான ஒழுங்குவிதிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தொடர்பான தொழிலாளர் சட்டவாக்கங்களை திருத்துவதன் மூலம் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கான குறைந்தமட்ட வயதினை 14 வயதிலிருந்து 16 வயதிற்கு அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வேலைத்தலங்களில் கைத்தொழில் சௌகன்யத்தை அபிவிருத்தி செய்வதற்கும் வலுப்படுத்துவதற்குமான சமூகக் கலந்துரையாடல்களை மேம்படுத்துவதற்காக தனியார் துறையிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட தொழில்முயற்சிகளின் முக்கிய முகாமையாளர்கள் முக்கிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை இலக்காகக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் செயலமர்வுகளும் நடத்தப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட தொழில்முயற்சிகளுக்கு சமூக மற்றும் வேலைத்தல ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தி அவர்களின் கடப்பாடுகளை அங்கீகரிக்கின்ற விதத்தில் 2017இல் விருதுகள் வழங்கப்பட்டன.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**வேலை செய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதியினால் (2010 விலைகளில்) அளவிடப்பட்டவாறான தொழிலாளர் உற்பத்தித்திறன் 2017இல்**

அட்டவணை 4.16
**முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தித்திறன் (அ)**

| விடயம் | 2016 (1ம் காலாண்டு - 3ம் காலாண்டு) (ஆ) | 2016 (ஆ) | 2017 (1ம் காலாண்டு - 3ம் காலாண்டு) |
|---|---|---|---|
| **நிலையான விலைகளில் (2010) மொத்த பெறுமதி சேர்க்கை ரூ.மில்லியன்** | **6,026,066** | **8,167,563** | **6,206,968** |
| வேளாண்மை | 477,747 | 644,262 | 461,010 |
| கைத்தொழில் | 1,785,716 | 2,399,285 | 1,862,046 |
| பணிகள் | 3,762,602 | 5,124,016 | 3,883,912 |
| **தொழிலாளர் உற்பத்தித்திறன் ரூ. '000 தொழில் செய்த மணித்தியாலத்துக்கு** | **463.56** | **467.23** | **458.29** |
| வேளாண்மை | 173.19 | 172.28 | 165.77 |
| கைத்தொழில் | 501.93 | 504.55 | 479.42 |
| பணிகள் | 562.98 | 570.23 | 564.62 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் 2017இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் மணித்தியாலமொன்றிற்கு 2016இன் இதே காலப்பகுதியின் மணித்தியாலமொன்றிற்கான ரூ.463.56 இலிருந்து ரூ.458.29 இற்கு 1.14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வேளாண்மைத் துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறனின் மட்டம் அனைத்து மூன்று துறைகளையும் விடக் குறைவான மட்டத்தில் மணித்தியாலமொன்றிற்கு ரூ.165.77 ஆகக் காணப்பட்டது. வேளாண்மைத் துறை தேசிய உற்பத்தியில் ஏறத்தாழ 7 சதவீதப் பங்கிற்கு மாத்திரம் பங்களித்த போதும் நாட்டின் ஏறத்தாழ 26 சதவீதமான தொழிலாளர்கள் அத்துறையில் தொழில்புரிகின்றனர். அதேவேளை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறையின் உற்பத்தித்திறன் 2017இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் முறையே ரூ.479.42 ஆகவும் ரூ.564.62 ஆகவும் காணப்பட்டது.

**கடந்த அண்மைக் காலத்தில் தொழில்நிலையில் அமைப்பியல் மாற்றமொன்று அவதானிக்கப்பட்ட போதும், அனைத்துத் துறைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.** வேளாண்மைத் துறையில் வர்த்தக ரீதியான வேளாண்மை நடவடிக்கைகள் மற்றும் அதிக விளைச்சல்களைத் தரக்கூடிய வகைகள் மற்றம் கலப்பு விதைகளின் பாவனை போன்ற பல்வேறு செயற்பாடுகள் மூலமாக உற்பத்தித்திறன் மட்டங்கள் முன்னேற்றப்படலாம். புதிய வர்த்தக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமை மற்றும் குறிப்பிட்ட வர்த்தக வசதிகள் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டமை என்பனவற்றின் காரணமாக கைத்தொழில் மற்றும் பணிகள் துறை, சிறிய பெறுமதிமிக்க சந்தைகளுக்கு ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துவதனூடாகவும் பன்னாட்டு நுகர்வோருக்கு பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளை வழங்குவதனூடாகவும் உயர்ந்த பெறுமதிகூட்டல்களின் மீது கவனத்தினைச் செலுத்த முடியும். வேளாண்மைத் துறையில் காணப்பட்ட குறைந்தளவு பெறுமதிகூட்டலைத் தவிர, தொழில்புரியும் குடித்தொகையாளரில் மிகப் பெரும் பங்கினர் இத்துறையில் காணப்பட்டமையும் இத்துறையின் குறைந்த உற்பத்தித் திறனுக்கு முக்கிய காரணமாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. எனவே, பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வளங்களை அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்ள முடியுமாயின் வேளாண்மை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கிராமப்புற இளைஞர்களை தொழிற்பயிற்சியினூடாக பெறுமதிகூட்டப்பட்ட துறைகளுக்குக் கொண்டு வருவதற்கு உயர்ந்தளவு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மேலும், இளைஞர்களின் மனோபாவங்கள் ஒப்பீட்டு ரீதியில் அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தினை உருவாக்குகின்ற பரந்தளவிலான பொருளாதார நிகழ்ச்சிநிரலுடன் இணைக்கப்பட்டிருப்பதனால் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கிராமிய இளைஞர்களைக் கவர்வதற்கு நாடளாவிய முறையில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தேவைப்படுகின்றன.

4